# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு பங்குனி மாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 11-ம் இலக்கம்


## சமாதானத் தூதுவர் சந்தப் பாப்பானவர்

— M. J. M. —

எமதுகாலம் அதிகம் கலக்கம் நிறைந்தது. உலகமுழுவதிலும் உச்சிப்பொழுதிலேயே பரந்த இருள் செறிந்துபோயிருக்கிறது. இவ்விருளிலும் ஓர்ஒளிகாலுகின்றது.

ஓடிக்கொண்டிருக்கும் கால அருவியைப் பின்னேக்கி இற்றைக்கு நாற்பதுவருடங்களுக்கு முன் நிகழ்ந்தவைகளை ஆராய்வோம். 1917-ம் ஆண்டு வைகாசி 13-ம் நாள். உலக சரித்திரத்தின் கடுஞ்சோதனைகாலம். 40 கோடி கத்தோலிக்க மக்களுக்கும் ஞானத்தளபதியாய் எதிர்காலத்தில் வழிகாட்டவிருந்தவர் அன்று தானே மேற்றிராணித்துவ அபிஷேகஞ் செய்யப்பெறுகின்றார்.

1917-ம்ஆண்டு—அது குறிப்பிடத்தக்க ஓர்ஆண்டு—கிழக்கு ஐரோப்பாவிலே உள்நாட்டுஅரசியற்புரட்சியின் ஆரம்பகுமுறல் கேட்டஆண்டு—அப்புரட்சி ரூஷிய தேசத்தைக் கிடுகிடுங்கவைத்த பொதுவுடைமையானது தொட்டிலிற்பிள்ளையாய் இருந்த ஆண்டு.

### பாத்திமாவின் காட்சி

அவ்வாண்டு குறிப்பிடத்தக்கதென்றால், மொன்சிஞ்ஞோர் பச்செல்லி (பாப்பரசர்) அபிஷேகம்பெற்றதினமும் முக்கியமானதே. அதே ஆண்டில் தானே வைகாசி பதின்மூன்றாம்நாள் தேவதாயார் பூலோகத்துக்கு இறங்கிப் போர்த்துக்கால்தேச பாத்திமாவில் காட்சியளித்த புனிததினம்.

விசுவாசக்கண்கொண்டு நோக்குவாருக்குப் 12-ம் பத்திநாத பாப்பரசரின் ஆழ்ந்த ஆத்மீக சீவியமானது அவருடைய வாழ்க்கையின் சிறப்பான ஓர் அம்சமென்றுமாத்திரம் கொள்ளமாட்டார்கள். வைதிக சிந்தனைகள் மக்களின் வாழ்க்கையிலே வரண்டுபோகும் இக்காலத்துக்கு ஓர்அரணக அவர்சீவியம்அமைந்திருக்கிறது என்பதையும் ஒப்புக்கொள்வார்கள்.

12-ம் பத்திநாதரின் வாழ்க்கை இக்காலத்துக்கு அவசியமென இறைவன் அமைத்ததேயென்று நாம் உணரவேண்டும். எமது எதிர்காலமும் அதேஇறைவன் கரங்களிலேயேஉண்டு. இப்பொழுது உலகத்தைநோக்கும்எவர்க்கும் அது இருள் மண்டிப்போய் இருப்பதாய்க் காட்சியளிக்கின்றது. எனினும், எம்மை வழிநடத்த ஓர் ஒளிஉண்டு.

### அதிகாலையில் ஓர்தரிசனம்

12-ம் பத்திநாத பாப்பரசரின் வாழ்க்கை கடவுளின் அமைப்பு என்பது இன்னொரு சம்பவத்தால் புலப்படுகின்றது. அன்று மார்கழி 2-ம்நாள். பரிசுத்தபிதா "கிறீஸ்துவின் ஆத்துமமே என்னைப் பரிசுத்தப்படுத்தியருளும்" என்ற அந்தியவேளைச்செபத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும்வேளை. ஓர் சோதிப்பிரகாசம் — சோதிநிறைந்த கிறீஸ்துநாதர் அவருக்குக் காட்சியளிக்கின்றார். அக்காட்சியின்பின் அவருடையநோயில் அபாயகரமான கட்டம். அவருடையகரங்கள் பலங்குன்றிச் சோர்ந்திருக்கின்றன. கடுந் தபஒழுக்கத்தின் விளைவாக வதனம்வெளுத்திருக்கின்றது. ஆயின் அன்பும், கனிவும்கலந்த அவருடைய இருதயம் துடிப்பை இழக்கவில்லை. அவர் பெற்றகாட்சி அவருக்குப் புத்துயிர்அளிக்கின்றது.

### மரியாயின் பாதுகாப்பு

பரிசுத்தபிதாவின் ஞானக்கொள்கையைக் கேளுங்கள். "எமதுநீண்ட குருத்துவவாழ்க்கையில் ஏதேனும்நன்மை நாம் செய்திருந்தால் — கத்தோலிக்க மதத்திற்குச் சந்தோஷமான— உபயோகமான எதுவும் நாம் ஆற்றியிருந்தால் அதையிட்டு நாம் பெருமைகொள்வதற்கில்லை. அந்தமகிமை தேவனுக்கும், எம் தேவஅன்னைக்குமே உரியது. ஏனெனில், நாம் மரியாயின்பாதுகாப்பில் இருப்பதாக உணருகிறோம். நாம் நிறைவாய் அனுபவித்த மனச்சஞ்சலவேளைகளில் எமது அருமை அன்னையின் உதவியை நாடினோம். நாம் நாடித்தேடியஉதவிகிடையாமற்போனதில்லை. அத்திருத்தாயார் எமக்கு ஞான வெளிச்சமும், பாதுகாவலும், ஆறுதலும் என்றும்அளித்திருக்கிறார்."

இன்னும் கேளுங்கள்: "அருமைமக்களே! இதுவே அருந்தருணம். மரணத்துக்கேதுவான தூக்கத்தைஒழித்து உறுதியாய் இருக்கவேண்டிய தருணம்இதுவாகும். உலகத்தின் எதிர்காலத்தையிட்டுச் சிரத்தையெடுப்போர் யாவரும் — நல் மனம்கொண்ட யாவரும் ஒருங்குதிரண்டு உழைக்கவேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும்.

முழுஉலகமும் அடியத்திவாரத்திலிருந்தே புதிதாகஅமைக்கப்பட்டு மறத்தினின்று அறத்திற்கும், அறத்திலிருந்து ஆண்டவனுக்கும் உரியதாக்கப்படவேண்டும்.

மற்றோர்தருணத்தில் தேவனுடைய நாமத்தினலும், பிதா மாதாக்கள், இளைஞர் சிறுவருடைய நாமத்தினலும் அவர்பேசியது சுவிஷேபாக்கியங்களை உட்பொருளாகக்கொண்டு திகழ்கின்றன. "உலகமக்கள்யாவரும் நீதியையும், சுதந்திரத்தையும், ஒசீவனத்தையுமேயன்றி மக்களின் உயிரை உறிஞ்சும் கொலைபாதகக் கொடுங்கோலை ஆசிக்கவில்லை."

## அங்கும் இங்கும்

### மொழிப்பிரச்சினை என்றால்!

"எம். ஈ. பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இருவருடங்களின்பின் மிக மோசமானநிலைக்கு வந்துள்ள மக்களின்பொருளாதாரப் பிரச்சினையை மூடிமறைப்பதே மொழிப்பிரச்சினை."

சேனற்றர் டோறிக் டி'சூசா

### அனைவரும் இந்தியவம்சாவழியினரே

"இலங்கையில் இந்தியவம்சாவழியைச்சேராத எந்தஒருவராவது இருப்பதாக எனக்குத்தெரியவில்லை. இங்குள்ளோர்அனைவரும் இந்திய வம்சாவழியினரே"

திரு. கண்டேவியா,
இந்திய ஹைகம்மிஷனர்.

### சுதந்திரம் பறிபோகுமா?

"ஐக்கியதேசியக்கட்சி பிரித்தானியரிடமிருந்து இலங்கைக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்தது. ஆனல், இப்பொழுது இங்குள்ளஒருகட்சி இலங்கையை ரூஷியாவிடம்ஒப்படைக்க முயல்கின்றது"

திரு. டட்லி சேனநாயகா,
முன்னைநாள் பிரதமர்

### தேசீயசெல்வமும் சுதேசஇயக்கமும்

"சுதேசிஇயக்கத்தில் நாம் முழுக்கவனமும் செலுத்தினலன்றித் தேசிய செல்வத்தை விருத்தியாக்கமுடியாது. கிராமங்கள்தோறும் நிறுவப்பட்டுள்ள நெசவுநிலையங்களிலே வேலைசெய்கிறவர்களின்தொகை குறைவதற்குப்பதிலாகக் கூடிவரும்வகையில் நாம் முயற்சிக்கவேண்டும். படித்தமாணவர்களும், நிலமில்லாதகமக்காரரும் அரசாங்கத்தின் குடியேற்றதிட்டங்களில் சென்றுகுடியேறி நாட்டின்பொருளாதாரத்தை விருத்தியாக்கவேண்டும்."

திரு. எம். ஸ்ரீகந்தா,
யாழ்ப்பாண அரசாங்கஅதிபர்.

### முக்கிய காரணங்கள்

"அரசாங்கத்தில்மக்கள் அதிருப்தியடைந்து வருகின்றார்கள். சிறுபான்மையோரை அரசாங்கம் அசிரத்தையுடன்நடத்துவது மக்களின் அதிருப்திக்கு முக்கியகாரணம். உணவுவிரதமிருந்தும், வேலைநிறுத்தங்கள் செய்தும் பயமுறுத்துவோருக்குப் பிரதமர் அடிபணிவது இரண்டாம்காரணம்."

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன,
முன்னைநாள் உணவுமந்திரி.

### பெரும்பிரச்சினை யாது?

"300 பேரைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்பட்ட மத்தியகிளேறிக்கல் பரீட்சையில் அரைலட்சம் பரீட்சார்த்திகள் தோற்றினார்கள். இந்தநாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் என்னநிலையில் இருக்கின்றதென்பதற்கு இது ஒருசான்றாகும். இன்றுள்ள பெரும்பிரச்சினை பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் இடவசதி கண்டுபிடிப்பதல்ல, பரீட்சையில் சித்தியடைந்தபின் அவர்களுக்கு வேலைகண்டுபிடிப்பதுதான் ஒருபெரும்பிரச்சினையாக இருக்கின்றது."

திரு. பி. தென்னக்கூன்,
சனப்பிரதிநிதிகள்சபை உபசபாநாயகர்

### பெற்றோர், ஆசிரியர்கடமை

"மாணவர்கள் தங்கள்பாடசாலைப் படிப்பைமுடித்து வெளிகொண்டதும் அரசாங்கத்திலே உத்தியோகம்தேடுவதில் தங்கள்காலத்தைச் செலவிடுகிறார்கள். ஆனல், அவர்களின்பிரயாசை வீணாகிவிடும், ஏனெனில், அரசாங்கஉத்தியோகத்தை எதிர்பார்த்து நாடெங்கும் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே, இந்தஇக்கட்டானநிலைமையில் மாணவர்களுக்குத் தொழில்நுட்பத் துறைகளில் பயிற்சியளிப்பது ஆசிரியர்களினதும், பெற்றோரினதும்முதற்கடமையாகும்."

திரு. டபிள்யு. பத்திராஜ,
மட்டக்களப்பு அரசாங்கஅதிபர்.

### கம்யூனிஸ்த பிரதமராகலாம்

"திரு. பண்டாரநாயகா இந்நாட்டின் முதலாவதுகம்யூனிஸ்த பிரதமராகலாம். கம்யூனிஸ்தர்களின் தந்திரோபாயங்கள் காரணமாக இந்தநாடுசீக்கிரம் கம்யூனிஸ்தர்களின் வலையில் விழுந்துவிடும். பிரதமரையும், அரசாங்ககட்சியையும் ஒன்றில்அவர்கள் தங்கள்கட்சியில் சேர்த்துக்கொள்வார்கள், அல்லது தாங்களேஆட்சியைக் கைப்பற்றிக்கொள்வதற்குக் காலம் வரும்வரை இந்தஅரசாங்கமே பதவியிலிருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே, கம்யூனிஸ்த பிரசாரங்களைநம்பி மக்கள் ஏமாறக் கூடாது."

திரு. ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்லை,
தண்டகமுமா, எம். பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாப்பரசர் தினவிழா

நிகழ்மதி 12-ந்திகதி புதனன்றுகாலை 9மணியளவில் வழமையிலும்பார்க்க மாணவர்மாணவிகள் அனைவோரும் புனிதமான ஆடைகள்அணிந்து சந்தோஷகோலத்துடன் அளம்பில்பாடசாலையில் குழுமியிருந்தனர். அச்சமயம் பாடசாலைத்தலைமையாசிரியர் எஸ். செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் பரிசுத்த பாப்பரசர்படத்தை நறுமணங்கமழும் பலநிறப்பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த உயாாசனத்தில் ஸ்தாபித்துப் "பாப்பரசரும், பாடசாலைப்பிள்ளைகளும்" என்றவிஷயப்பற்றிப் பெரிதும் படிப்பனைக்குரியவிதமாய்த் திறம்படப் பேசினார். ஆசிரியர் கேட்டுக்கொண்டபடி, தாங்கள்ஒவ்வொருநாளும் பாப்பரசரின்கருத்துக்கள் நிறைவேறும்படியாக மன்றாடிவருவதாக மாணவர் மாணவிகள் எல்லோரும் கைகளை உயர்திச் சம்மதந்தெரிவித்தனர். பின்னர்உதவியாசிரியை செல்வி பிலோமினா அவர்கள்தலைமையிலே அனைவோரும் நிரையாகஆலயம்சென்று செபவேண்டுதல்நடத்தினர். கடைசியாகப் "பாப்பரசர் நீடூழிவாழ்க!" என்றகீதத்துடன் விழாமுடிவடைந்தது. அப்போது விழாவைப்பார்த்த வானமும் மகிழ்ந்து பெரும்மழையைப்பொழிந்தது.

அலம்பில் மாணவன்

---

## பாப்பரசர் தினம்

பரிசுத்தபிதா 12-ம்பத்திநாதபாப்பரசரின் முடிசூட்டுவிழா ஞாபகதினம் (12-3-58) இன்று பண்டிவிரிச்சான், கத்தோலிக்கபாடசாலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு மகாவந். யாழ்ப்பாணமேற்றிராணியார் அவர்கள் சமுகந்தந்து, பாப்பரசரின் அழகியபடத்தைத் திரைநீக்கஞ்செய்து, பாப்பரசரைப்பற்றியும், தேவதாயாரைப்பற்றியும் அழகாகப்பேசினார். தேவதாயாரின் வரவணிக்கங்களையும் பிள்ளைகளுக்குக்கொடுத்து அவைகளை அணிந்துகொள்ளுமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டார். பாடசாலைப்பிள்ளைகளின் ஆடல்பாடல்கள் சபையினர்க்கு ஞானப்பரிமளிப்பை உண்டாக்கியது. தலைமை ஆசிரியர் நன்றியுரைகூறியதும் மேற்றிராணியார் தமதுதிருக்கரஆசீர்ந்தார். பாப்பரசர் கீதத்துடன் விழாஇனிது நிறைவெய்தியது.

—நிருபர்.

---

## மன்னாரில் பாப்பரசர் தினவிழா

இம்மாதம்12-ந்திகதி புதன்கிழமை மன்னாரில் பாப்பரசர்தினவிழா என்றுமில்லாதவாறு மிகவும்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆலயங்களிலும், கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் அன்று பாப்பரசின் வெண்-பொன்நிறக்கொடிகள் பறந்துகொண்டிருந்தன. ஆங்காங்கு வீடுகளிலும் பாப்பரசின்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தமை யாவர்க்கும் ஞானமனோற்சாகம் அளிப்பதாயிருந்தது. காலை 6-30மணியளவில் பாப்பரசரின்கருத்துகட்காக ஓர்திவ்வியபூசைப்பலி நிறைவேறியது. பெரும்பான்மையான விசுவாசிகள் அதற்குச் சமுகமளித்திருந்தார்கள்.

பிற்பகல் 4-30மணிக்கு அர்ச். செபஸ்தியார்ஆலயத்துக் கருகாமையிலுள்ள மைதானத்தில் ஆயிரவருக்குமேற்பட்ட மாணவர்மாணவிகள் அணிவகுத்துநின்றனர். ஆயிரவருக்குஅதிகமான விசுவாசிகளும் அவ்வேளைபிரசன்னமாயிருந்தனர். 5மணியளவில் யாழ்ப்பாணமேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையவர்கள் குருப்பிரசாதிகள் புடைசூழ்ந்துநிறக, கீதங்கள் இசைக்க, அழகுறஅலங்கரிக்கப்பட்டிருந்தமேடையில் எழுந்தருளிப் பாப்பரசின்கொடியை ஏற்றிவைத்துப் பாப்பரசரினிடமாக மாணவர் மாணவிகளின அணிவகுப்பு மரியாதையைஏற்றார். இதனைத்தொடர்ந்து ஒவ்வோர்பாடசாலையும் பாப்பரசர் பேரில் ஒவ்வோர்நிகழ்ச்சிகள் நடத்தின. கடைசியாக அர்ச். சவேரியார் கல்லூரி மாணவர்களால் கோபுரம் அமைத்துக் காட்டப்பட்டது.

ஈற்றில், ஆண்டவரவர்கள்எழுந்து பாப்பரசரின்மகிமைகளை எடுத்துக்காட்டி விளக்கினார். பாப்பரசரின்சொந்தஇடமான ரோமாபுரியிலும் அவருக்கு இன்னும்கூட எதிர்ப்புகள்இருக்கின்றன; ஆகவே, பாடசாலைமாணவர், மாணவிகள்எல்லோரும் தினமும்காலையில்எழுந்தவுடன் சிலுவைஅடையாளம்போட்டு ஒவ்வோர்பிரியதத்தமந்திரம் அவரின் கருத்துகட்காகச் சொல்லிவருமாறு வேண்டிநின்றார். அப்போது அவர்களெல்லாம் அவ்வாறு சொல்லிவருவதாகச் சம்மதிதெரிவித்தும், அங்குகுழுமியிருந்த சனசமுத்திரம் "பாப்பரசருக்கு ஜே!" என்று கோஷமிட்டுநிற்க, அவரிகீதம் பாடப்பட்டது. பின்னர் சதாசகாயமாதாவின் நோவனைப்பத்தி முயற்சியுடன் ஆண்டவர்அவர்களால் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டு விழா இனிது முடிவடைந்தது.

சூசை கூஞ்ஞ்
அர்ச். சவேரியார் கல்லூரி,
மன்னார்.

---

## பாப்பரசர் தினவிழா

வதிரிப்பதியிலே இம்மாதம் 12-ந்திகதி பாப்பரசர்தினமன்று எமதுகட்டளைக்குரவர் வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியவர்கள் பெரியபாடற்பூசை நிறைவேற்றினார். ஞாயிறு, கடன்திருநாட்களிற்போன்று விசுவாசிகள் பெருந்திரளாகச் சமுகமளித்திருந்தார்கள்.

9மணிக்குத் திருஇருதயகல்லூரி உட்பட வதிரிவிசாரணைப்பங்கிலுள்ள நான்குபாடசாலைகளையுஞ்சேர்ந்த மாணவர், மாணவிகள் அர்ச். அந்தோனியார்கோயில் மைதானத்திலே ஒன்றுகூட ஆசிரியர் வீ. அந்தோனிப்பிள்ளை இராசையாஅவர்கள் தலைமையில் அரைமணிநேரம் ஓர்உடற்பயிற்சிக்காட்சி நடைபெற்றது. அவ்வேளை பாப்பரசின் கொடிவணக்கத்தைக் கட்டளைக்குரவர் உயர்மேடையில்நின்று ஏற்றார்.

சாயந்தரம் 5மணிக்குத் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதத்தைத்தொடர்ந்து முன்சொன்ன மாணவர்மாணவிகளால் திருஇருதயகல்லூரி மண்டபத்திலே வாழ்த்துப்பா படிக்கப்பட்டபின் சொற்பொழிவுகள், சம்பாஷணைகள், நடனங்கள் முதலியன நடைபெற்றன. இவற்றிலே கட்டளைக்குரவரால் உருவாக்கப்பட்ட "பாப்பரசர் முடிசூட்டுவிழா" பெரிதும்பாராட்டத்தகுந்த நிகழ்ச்சியாகும். பல்லாயிரமைல்களுக்கப்பால் அப்போது ரோமாபுரியில்நடைபெற்ற பாப்பரசரின் முடிசூட்டுவைபவத்தில் நமதுகுரவரும் சமுகமாயிருந்தமையால் ஆச்சரியப்படக்கூடியமுறையில் இந்தநிகழ்ச்சியை நடத்திவைத்தார். இதிலே தேசாதிதேசங்களிலிருந்து வந்தகருதினல்மார் வாத்தியநிகழ்ச்சியிலே வரிசைகளுடன் அழைக்கப்பட்டுச் சென்றகாட்சி, பாப்பரசருக்குமுடிசூட்டும்காட்சி, மெய்காப்பாளர் பவனிவந்தகாட்சி ஆதியன மிகவுஞ்சிறந்த முறையில் காண்பிக்கப்பட்டன. இன்னும் பாப்பரசர்தெரிவை வத்திக்கான் மைதானத்தில்காத்துநின்றயாவர்க்கும் வெண்புகைமூலம் அறிவித்தகாட்சி விபரிக்கும்தன்மையன்று. மாணவர்களைக் கருதினல்மார், பாப்பரசர், மெய்காப்பாளர்முதலிய பாத்திரங்களுக்குத் தக்கதக்கவிதமாய் நியமித்து ஏற்றஉடைகளை ஒழுங்குசெய்தமையும், அவர் தமதுசாங்கோபாங்கத்தை மாணவர்களிடையே புகுத்தியமையும் பெரும்பிரமிப்பைத்தாலாயின.

முடிவுரையாக ஆசிரியர் என். எம். சிங்கராசா அவர்கள் பேசியபோது, அன்றுஒத்துழைத்த தலைமைஆசிரியர்களுக்கு நன்றிதெரிவித்ததோடு, பாப்பரசர் முடிசூட்டுவிழாவை நாடகரூபமாக நடத்தியபெருமை சுவாமிகளுக்கேஉரியதென்றும், அவர்பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் எமதுபாப்பரசரின் திருமுடிசூட்டுவைபவத்திலே பங்குபற்றியதும், அதை ரோமாபுரியிலே நடந்ததுபோல எமக்குக்காண்பித்தமை; வதிரிவிசாரணைப்பங்குக் கத்தோலிக்கமக்களுக்குக்கிடைத்த ஓர்அதிர்ஷ்டமென்றும்கூறி முடித்தார். பாப்பரசர்கீதத்துடன் விழாமுடிவெய்தியது.

—நிருபர்.

---


**TUITION**
IN
**Shorthand-Typewriting and Music**

**Shorthand :** Pitman's Phonetic System
**Typewriting :** Vertical Touch Method
} Theoretical course and Advanced Level

Students (boys and girls) prepared for Pitman's London, London Chamber of Commerce and other Examinations.

**Shorthand Speed Training a Speciality**

Several students already trained are in Govt. Service, Business Firms and other Institutions in Ceylon and India.

**Church Music :** English and Plain-Chant (Gregorian)

**Individual attention paid to each student.**

**JOSEPH ANDREW,**
"De Mazenod", 4th Cross Street, Jaffna.


---

## நெடுந்தீவும், பாப்பரசர் தினமும்

9-3-58ஞாயிறுவாரம் நெடுந்தீவுக்கு ஒருசுபதினமாகும். அன்றுதினம் பரிசுத்தபிதா 12-ம்பத்திநாதர் பாப்பரசராக முடிசூடிய வைபவதினமும், அவரின் ஜனனதினமும் அர்ச். யுவானியார்ஆலயத்தில் நெடுந்தீவுக்கட்டளைக்குரவர் வண. ஜோண்சிங்கராயர் சுவாமியவர்கள்தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

காலை பாடற்பூசையுடன் விழா ஆரம்பமாகியது. சாயந்தரம் 4மணிக்கு இருமைல்நீளமான ஊர்வலமொன்று நடைபெறலானது. பாடசாலைச் சிறுவர், சிறுமியர் தத்தம்பாடசாலைச் சின்னங்களுடனும், ஆண்பெண்உட்பட ஆயிரவருக்குமேற்பட்டோர் பாப்பரசர்கொடி ஏந்தியபடியும் பவனியிற் பங்குபற்றினர்.

இரதத்தில்பூட்டப்பட்ட வானொலியுதவியுடனும், பக்கவாத்தியங்களின் துணைகொண்டும் பாலர், பாலிகைகளால் பாப்பரசர்கீதங்கள் இடையிடையே பாடப்பட்டன. ஆசிரியர்கள்: எஸ். தேவதாசன், ஜி. அந்தோனிப்பிள்ளை என்பவர்களால் 'நமதுநல்லாயன்', 'ஒரு வெண்கொற்றக் குடையிலே' என்பனபற்றிப் பவனியின் போது பேசப்பட்டன.

ஆலயமுன்றிலில் அமைந்த அழகான முற்றத்திலே பாப்பரசர்கொடியேற்றப்பட்ட கம்பத்தின்கீழ் செல்வன் பி. ஞானப்பிரகாசம், செல்வன் ரி. எஸ் தாக்கி, ஆசிரியர் எம். யோஸ் சின்னத்துரை என்பவர்களால் பரிசுத்தபிதாவின்வாழ்க்கைவரலாறு, அவரது ஆட்சி, அஸ்திவாரக்கல்என்னும் விஷயங்கள் பற்றிச் சொற்பொழிவுகள்நிகழ்த்தப்பட்டன.

ஈற்றில், வண. ஜோண்சிங்கராயர் சுவாமியவர்களால் பாப்பரசர்மீது மக்கள்வைத்திருக்கவேண்டிய பக்தியை விளக்கி அரியபுத்திமதிகள் கூறப்பட்டுச் சற்பிரசாதஆசீர்வாதத்துடன் மாலை 7-30மணிக்கு விழாஇனிது முடிபெய்தியது.

நெடுநடு. கண்டுகளித்தோன்.

---

மதிப்புரை

## The Henrican. 1957

அர்ச். என்றிக்கப்பர் கல்லூரியின் 1957-ம்வருடக் கலைவெளியீடு கண்ணையும் மனத்தையும் கவரத்தக்கவகையில் வெளிவந்துள்ளது. கல்லூரி அதிபரும், கலைச்செல்வருமாகிய வண. எல். ஏ. சிங்கராயர்சுவாமியவர்களின் வெள்ளிவிழா ஞாபகார்த்தஇதழாகத் திகழுமாறு அன்னாருக்கு இம்மலர்அர்ப்பணஞ்செய்யப் பட்டுள்ளது.

இம்மலரின்கண் கட்டுரைகளும், அறிக்கைகளும், பாடல்களும், பேச்சுகளும்இடம்பெற்றுள்ளன. யூபிலிநாயகரின் பக்திவைராக்கியத்தையும், புத்திதீட்சண்யத்தையும்குறித்துச் 'சொல்விளம்பி' யாத்துள்ள பாமாலையானது சொன்னயமும், பொருணயமும ஒருங்கமைந்து சிறந்து விளங்குகின்றது. அதிபரின் வருடாந்தஅறிக்கையானது கல்லூரியின் கலைவளர்ச்சியையும், பிறசேவைகளையும் தெள்ளத்தெளிவாய்க் காட்டுவதோடு, இன்றைய கல்விப் பிரச்சினைகளையும் விளக்கிநிற்கின்றது. ஆங்காங்கு திகழும் புகைப்படங்கள் மலரை அணிசெய்வதுடன், கல்லூரி புறநிகழ்ச்சிகளில்கொண்டுள்ள தரிசனையின் அளவையும் சித்திரிக்கின்றது. மாணவரின் கட்டுரைகளும், பேச்சுப் போட்டிகளும் எழுத்துவன்மையையும், சொல்வன்மையையும் எடுத்துக் காட்டுவதுமன்றி அவர்களின் தமிழ் மொழிப்பற்றையும் தொனிப்பிக்கின்றன.

இக்காலவாலிபருக்குச் சமயசஞ்சீவியாக உதவத்தக்கவகையில் அரியபல சன்மார்க்கக்கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. அவைகள் உயர்ந்தகருத்துக்களை உள்ளடக்கியவையாயும், சிறந்தநடையில்எழுதப்பட்டனவாயும் திகழ்கின்றன. எனவே, இம்மலர் கல்லூரியுடன் தொடர்பற்ற ஏனையோருமே படித்தின்புறத்தக்கதென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. எமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

மருதமடுச்செபமாலைமாதாவின் விசேஷ கிருபையால் என்மனைவிக்கு ஏற்பட்டிருந்த ரணவியாதியில் உயிருக்கு ஆபத்தான ஆடிமாதம் 2-ந்திகதியாகிய மாதாவின் திருநாளில்தானே கடினமானவருத்தத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சுகம்உண்டாக ஆரம்பித்து இப்போது பூரணசுகம் கிடைத்ததற்காக எங்கள் மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகிறேன்.

கு. மி. சூசை பெஞ்சமின் டிரோஸ்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான பதக்கம் சந்மானிக்கப் பெறுகின்றார்

பரிசுத்தபிதா 12-ம் பத்திநாத பாப்பரசர் நிகழும்பங்குனிமாதம் 2-ந்திகதி ஞாயிறுவாரம் தமது 82-வதுபிறந்தவிழாவைக் கண்டு களிக்கலாயினர். அன்றுதினமே அவர் சம்பேதுருவானவரின் சிம்மாசனத்துக்குத் தாம்தெரிந்து கொள்ளப்பெற்ற 19-வதுநிறைவு விழாவையும் கொண்டாடினார். இவ்வருடம் இந்தஇரு விழாக்களையும் கொண்டாடுவதற்கு முன்னதாக அவர் விசேஷ கௌரவம் ஒன்றால் கௌரவிக்கப்படலாயினர். அதாவது முந்தியஞாயிறன்று அமெரிக்க ஸ்தானிகரால் ஜோர்ஜ்வாஷிங்ரன் கார்வர்-ஞாபகஸ்தாபனத்தின் தங்கப்பதக்கம் அவருக்குச் சந்மானிக்கப் பெற்றமையேயாகும்.

இந்தப்பதக்கம் மனிதகுடும்பத்துக்கு மகத்தானசேவைகள் செய்கிறவராகத் தெரிந்துகொள்ளப்படும் பிரபலஸ்தர்ஒருவருக்கு வருடந்தோறும் சந்மானிக்கப்படுகிறது. சென்றவருடம் இந்தப்பதக்கம் அமெரிக்க ஜனாதிபதி ஐஸனோவர்அவர்களுக்கு வழங்கப்படலாயிற்று. பாப்பரசருக்கு வழங்கப்பெற்ற இவ்வருடப்பதக்கத்தில் "மக்களிடையே நல்லுறவை அதிகஞ் சீராக்குவதற்கும், மனிதசமூகத்தின் சேமவாழ்விற்குமாகப் பரிசுத்தபிதா 12-ம்பத்திநாதரால் சாதிக்கப்பெற்ற வழமைக்கு மாறான விசேஷசேவைகளை அங்கீகரிக்குமுகமாக அவருக்கு வழங்கப்படும் தலைசிறந்த ஓர் பரிசய ஞாபகம்" என்னும் வாக்கியம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க ஸ்தானிகர் இந்தப் பதக்கத்தைச் சந்மானிக்கையில், துன்பப்படும் எண்ணிறந்த உலக மக்களுக்கும், உண்மையான உலக சமாதானத்துக்குமாகப் பாப்பரசர் ஆற்றியுள்ளவைகளை விசேஷவிதமாகக் குறிப்பிடலாயினர். பரிசுத்தபிதா ஆங்கிலபாஷையிலே அளித்த பதிலில், சகல மனிதரும் இரட்சிக்கப்படவேண்டுமென்றும், உண்மையைஅறிய வழிநடத்தப்பட வேண்டுமென்றும் சம்பாவிலுஅப்போஸ்தலர் எழுதியதுபோல, நமது இரட்சகராகிய சர்வேசுரனின் சித்தமும் அதுவேயாம்; அவர் திருச்சபைக்கு ஒப்படைத்த அகில உலக தூதைப்பற்றிய காத்திரத்தை ஆழமாக உணர்ந்துகொண்டது உண்மையே; 'எவ்வித தாழ்ச்சியோடும், சாந்தத்தோடும், பொறுமையோடும் ஒருவரொருவரைப் பரமஅன்போடு தாங்கிக் கொண்டு, சமாதானபந்தனத்தில் மனஒற்றுமையைச் சாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்' என்று ரோமாபுரியாகிய இந்நகரிலிருந்து சம்பாவிலுஅப்போஸ்தலர் தமது சகோதரர்களுக்குஅனுப்பிய இதேசெய்தியையே தனதுசெய்தியாகத் திருச்சபைகணித்துப் பலநூற்றாண்டுகளாகத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கிறது" எனக் கூறலாயினர்.

—(✠)—

# லூர்துபதிக்கு இந்திய முதல் யாத்திரை

இந்தநூற்றாண்டுவிழா வருடத்திலே லூர்துபதிக்கு முதல்இந்தியயாத்திரை சென்னையிலிருந்து ஏயர்இந்திய விமானம்ஒன்றிலே சென்றமாசிமாதம் 8-ந்திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி ரோமைநகர்வழியாக நடைபெற்றுள்ளது. சென்னையிலே சான்தோமிலுள்ள ஸ்ரெல்லா மாறிஸ் கல்லூரியைச்சேர்ந்த பதினேழுமாணவிகளைக்கொண்ட இந்தயாத்திரைக் கோஷ்டியானது மரியாயின் பிரான்சீஸ்கன் சபைக் கன்னியாஸ்திரிமார் இருவரின் தலைமையிலே — அதாவது சிரேஷ்ட தாயார், கல்லூரித்தலைவியாகிய இருவரினதும் தலைமையிலே அங்குசெல்லலாயிற்று. இந்தயாத்திரைக்கோஷ்டியில் 5கத்தோலிக்கமாணவிகளும், 1புரொட்டஸ்தாந்தமாணவியும், 11இந்துசமய மாணவிகளும் அடங்கியிருந்தார்கள். இவர்கள் ரோமைநகரையும், லூர்துபதியையும், இத்தாலி, பிரான்ஸ், பிரித்தானி, சுவிற்சர்லாந்துமுதலாம் நாடுகளிலுள்ள விசேஷப்பட்ட திருசேத்திரங்களையும், நகரங்களையும் தரிசித்து, ஒருமாதகாலத்தில் தங்கள் யாத்திரையை முடித்துக்கொண்டு இம்மாதம் 4-ந்திகதியன்று மறுபடியும் இந்தியா வந்து சேரலானார்கள். இந்தியசர்வகலாசாலை மாணவர்களையே அதிகமாகக்கொண்ட மற்றோர்கோஷ்டியும் வைகாசி மாதம் 1-ந்திகதியன்று விமானமூலம் பம்பாயிலிருந்துபுறப்பட்டு ஐரோப்பாவிலே கல்விசம்பந்தமான ஓர் சுற்றுப்பிரயாணம் நடத்தவிருக்கிறது. இந்தக்கோஷ்டியும் லூர்துபதியைத் தரிசிக்கத் திட்டமிட்டிருக்கிறது. மைசூர் நகரிலுள்ள அர்ச். பிலோமினாகல்லூரிஅதிபரே இந்தச்சுற்றுப்பிரயாணத்துக்குப் பெருந்துணை செய்துவருகின்றார்.

---

## சினிமாவில் 13-ம் சிங்கராய பாப்பானவர்

1878-ம்ஆண்டுமுதல் 1903-ம் ஆண்டுவரை திருச்சபையை ஆளுகைசெய்த 13-ம்சிங்கராய பாப்பானவர் வத்திக்கான் தோட்டங்களில் நடந்துலாவி வருவதைக் காண்பிக்கும் சினிமாப்படம்ஒன்று ரோமைநகரிலே சமீபத்தில் காண்பிக்கப்படலாயிற்று. சினிமாப்படஉற்பத்தியின் ஆரம்பத்திலே 1896-ம்ஆண்டு இந்தப்படம் தயாரிக்கப்பெற்று ரோமைநகரிலுள்ள கத்தோலிக்கசினிமாநிலைய சாசனசாலையில்வைத்துப் பாதுகாக்கப்பட்டு வரலாயிற்று. தமது உலாவுகையின் முடிவிலே பாப்பானவர் தம்மைக் கவனித்து நிற்கிறவர்களை ஆசீர்வதிப்பதும் இதில் காணப்படுகிறது. இந்தப் படத்தைப் 14 கருதினால்மாரும், மற்றும் குருசிரேஷ்டர்களும் உட்பட அநேகர் பார்த்து மகிழ்ந்தார்கள்.

—(✠)—

## கவலை குடிகொண்ட மனிதர்

பரிசுத்தபாப்பரசரின் 82-வது பிறந்தபெருநாளன்று புதிதாகப் பிடிக்கப்பட்ட அவரின்பிரதிமைப் படமானது, இத்தாலியிலே சென்றவருடத்தில்அலையலையாகஎழுந்த கத்தோலிக்க சமயவிரோத உணர்ச்சிகள்காரணமாக அவருக்குண்டான கவலையையும், கலக்கத்தையும், கடைசியாக அத்தேசபிறாற்றோ நகர பியோர்டெல்லி மேற்றிராணியார் மானநஷ்டத்திற்காகப் புளோறென்ஸ் நகர நீதிஸ்தலம் ஒன்றால் நிகழும் பங்குனிமாதம் 1-ந்திகதி சனிக்கிழமையன்று குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டதிலிருந்து அந்தக்கவலையும், கலக்கமும் உச்சநிலையடைந்திருப்பதையும் அவர்வதனம்பிரதிபலிக்கின்றது. பல்லாயிரக்கணக்கான சோபனவாழ்த்துச் செய்திகள் அவருக்கென்று வத்திக்கானில்வந்து குவிந்தபோதிலும், வத்திக்கான்நகருக்கு உள்ளும்புறமுமாக வத்திக்கான் கட்டடங்களிலே பாப்பரசின்கொடிகள்பறந்து கொண்டிருந்தபோதிலும் யாதாமோர் கொண்டாட்டமும் நடத்தப்பாப்பரசர்அனுமதிக்கவில்லை. அவர் முந்திய பிறந்த பெருநாள் முதல் பத்துலட்சம் யாத்திரிகர்களை வரவேற்று வாழ்த்தியிருக்கின்றார். கடினமாக உழைத்தபோதிலும் அவருடைய சுகம் அதிகம் நன்றாயிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

# அர்ச். தொன்பொஸ்கோவை அறிந்த குருவானவர்

சலேசியன்சபையை அடியிட்டவரான அர்ச். தொன்பொஸ்கோவுடன் தொடர்புபூண்டவராய்ச் சீவந்தராக எஞ்சியிருந்த வண. எனியாஸ் ரொஸ்ஸிசுவாமியார் அன்று புதன்கிழமைகாலை இங்கிலாந்திலே மெல்சென்கோட் எனுமிடத்தில் தமது84-ம்வயதில் காலஞ்செல்லலாயினார். அர்ச். தொன்பொஸ்கோ 1888-ம்ஆண்டில்மரித்து, 1934-ம் ஆண்டில் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெற்றார். 1897-ம்ஆண்டு குருப்பட்டம்பெற்று, 1926-ம்ஆண்டு முதல் 1940-ம்ஆண்டுவரை இங்கிலாந்தில் சலேசிய மாகாண சிரேஷ்டராயிருந்த வண. ரொஸ்ஸிசுவாமியார் ஓர்பாலியனாயிருந்தபோது ஓர்நாள் தொன்பொஸ்கோவைப் போய்ச் சந்தித்தார்.

ஆனால், முதலில் இது ஓர் சந்தோஷகரமான சந்திப்பாய்இருக்கவில்லை. ஏனெனில், இந்தப்பாலியன் தனது தாயின் விருப்புக்கு மாறாக வந்திருக்கிறான் என்பதைத் தொன்பொஸ்கோ ஞான திருஷ்டியால் அறிந்து, அவனைப் பார்த்து, "நாங்கள் சிநேகிதர்கள் அல்ல" என்று கூறிவிட்டு, அவனோடுவந்த ஏனையஇருபாலியருக்கும்போல அவனுக்குத் தமது கரத்தை முத்தமிடக்கொடுக்க மறுத்துவிட்டார். அப்போது இந்தப்பாலியன் (ரொஸ்ஸிசுவாமியார்) "தொன்பொஸ்கோ என்னைப்பார்த்து ஓர்கால்புன்னகை செய்ய வேண்டுமென்றுமாத்திரம் நான்ஆசிக்கிறேன்" என்று தனக்குள்ளே சிந்தித்தவண்ணமாய் அவர்எதிர்முகமாகத்திரும்பி அப்பாலேபோவதைக் கவனித்துக்கொண்டு நிற்கும்போது, அர்ச்சியசிட்டவர் ஓர்மூலையால் திரும்பப்போகுசமயம் அப்பாலியன் தனதுதொப்பியைக் கையிலெடுத்து அவருக்குநேரேஅசைத்து வந்தனஞ்செய்தான். உடனே தொன்பொஸ்கோ திரும்பிப் பார்த்துப் புன்னகைசெய்தார்.

பாலியன் அவரைமீளவும் பேட்டிகாண விரும்பினான். இம்முறை தொன்பொஸ்கோ பாலியனை நோக்கி, "இப்போதுநாங்கள் சிநேகிதர்கள்; நீஇப்போது நம்முடன் தங்கியிருக்கலாம்" எனக் கூறினின்றார். தொன்பொஸ்கோவின்கண்கள் நட்சத்திரங்களைப் போல்ஒளிவீசியதாகவும், மானிட ஆத்துமங்களின் அந்தரங்கங்களை அவர்அறிந்தார் என்றும் வண. ரொஸ்ஸி சுவாமியார் கூறிவந்தார்.

## அமெரிக்க கருதினாலின் புதியபதவி

சரித்திரத்தில் முதன்முறையாக அமெரிக்க கருதினால்ஒருவர் "ரோமன்கூறியா" என அறியப்படுகின்ற திருச்சபைத் தலைமைஆட்சிக்குழுவில் கடமையாற்றவிருக்கின்றார். அதாவது ஐக்கியஅமெரிக்கதேச சிக்காகோ நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் சாமுவேல் ஸ்றிற்ச்ஆண்டவர் விசுவாசப்பரப்புதற் திருச்சங்கத்தின் பதிற்தலைவராகப் பாப்பரசராலே நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். வேதபோதகநாடுகளுக்கெல்லாம் இதுவரை தலைவராய் இருந்துவந்தவர் 86வயதுடைய கருதினால் புமாசோனி பியொந்தி ஆண்டவரே. இவர் கடந்தசில வருடங்களாகக் கண்பார்வை குறைந்துவருங் காரணமாகத் தமது கடமைகளில் பெரும்பகுதியைக் காரியதரிசிகளின் துணையைக்கொண்டே நடத்திவருகின்றார். தற்போதுகருதினால்ஸ்றிற்ஸ் ஆண்டவர் விசுவாசப்பரப்புதற் திருச்சங்க பதிற்தலைவராயிருந்து அவருக்குத் துணைச்செய்யுமாறு ரோமாபுரி செல்லவிருக்கின்றார். இருகருதினால்மாரும் இனிமேல் திருச்சபையின் வேதபோதகநாடுகளுக்குப் பொறுப்பாளிகளாய் இருந்துவருவார்கள். தற்போது 70 வயதுடையவரான கருதினால் ஸ்றிற்ச் ஆண்டவர் 1939-ம் ஆண்டுமுதல் சிக்காகோநகர் அதிமேற்றிராணியாராயும், 1945-ம் ஆண்டுமுதல் ஓர் கருதினாலாயும் இருந்துவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குனி மாதம்

**பொதுக்கருத்து:** பாப்பரசரின் பொதுக்கருத்துக்காகவும், விசேஷ கருத்துக்காகவும் வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** கடவுள்மீதுள்ள நம்பிக்கையானது இந்தோனீசியாவின் அரசியல்திட்டத்தின் அடிப்படையாக அமையும்படி மன்றாடிக் கொள்வது.

சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
பங்குனி மாதம் 20-ந் திகதி

## ஜனநாயகமா? சர்வாதிகாரமா?

எமதுநாட்டின் இன்றையஅரசியல்வானத்திலே ஓர்பால் ஜனநாயக சோஷலிசமென்ற சமதர்மக்கொள்கையும், மறுபால் சர்வாதிகார சோஷலிசமென்ற சமதர்மக்கொள்கையும் ஒன்றுடனென்று தம்முளே முட்டிக்கொள்வனபோன்று மின்னிக் குமுறிப் பெருமுழக்கஞ் செய்து கொண்டிருக்கின்றன. வேறோர் விதமாகக்கூறுமிடத்து — ஜனநாயகம், சர்வாதிகாரமாகிய இரண்டிற்குமே விலாங்கைப் போல அதற்கும் அதற்காய், இதற்கும் இதற்காய்ப் பொதுவாக நின்றுகொண்டிருக்கும் ‘சமதர்ம’த்தை அகற்றிவிட்டு அவ்விரண்டையும்பற்றிக் கூறுமிடத்து — ஜனநாயகமா, கம்யூனிஸமா எமதுநாட்டிலே எதிர்காலத்தில் தலைகாட்டப்போகும் அரசியற்கொள்கை? என்றுதான் கருத்தாக நோக்கவேண்டியிருக்கிறது.

இது நிகழ்ந்தது சென்றகார்த்திகைமாத முதல் வாரத்திலே. இலங்கையில் அலைகடல்போலப் பெருகிப் பரந்துகொண்டுவரும் கம்யூனிஸம்சம்பந்தமாய் அவ்வாரத்தில்கூடிய பாராளுமன்றத்தில் பிரதமர் பண்டாரநாயக அபிப்பிராயந்தெரிவித்துப்பேசியபோது: “இந்தநாடு ஒருபோதுமே ஓர்கம்யூனிஸ்த அரசாங்கத்தைக் கொண்டிராதிருக்க வேண்டுமென்று நான்கடவுளைப் பிரார்த்திக்கிறேன்” எனக்கூறியது இந்நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகளிடையே திருப்திகரமான ஓர்நிலைமையை உண்டுபண்ணியது. ஆனால், அதற்குமுந்திய வாரத்திலே எமதுநாட்டின் ஜனநாயகசக்திகளைஎதிர்த்து இரத்தக்கொதிப்பையுண்டாக்கும் பயமுறுத்தல்கள்நிறைந்த பேச்சு ஒன்றை உணவு-விவசாயமந்திரி பிலிப்குணவர்த்தனபிறைஸ்பாக்கத்தில் நிகழ்த்தலாயினர். இவ்விதம்பிரதமரின்போக்கும், உணவு-விவசாயமந்திரியின் போக்கும் அப்போதேவிபரீதமாகத் தோன்றின.

நிற்க, இப்போதைய நிலைமையென்ன? உணவு-விவசாயமந்திரியின் போக்கையிட்டுத் தற்போது எழுந்துகொண்டிருக்கும் அபிப்பிராயம்யாது? “அண்மையில் ஏற்பட்டது வெள்ளப்பெருக்கு; ஆனால், இன்று அதனிலும் பார்க்கப் பெரியதொரு ஆபத்து நம்மைப் பயமுறுத்துகின்றது; கம்யூனிஸம்என்னும் இராட்சத மிருகம் நம்மிடையே தலைதூக்கிக் கொண்டிருக்கிறது; கீழ்த்தரமான முறைகளைக்கொண்டு நம்மிடையே கம்யூனிஸத்தைப்புகுத்த உணவு-விவசாயமந்திரி பிரயத்தனஞ் செய்கிறார்; தற்போதுள்ள விவசாயசங்கங்களுக்குப் பதிலாகப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், நெற்காணிச்சட்டம், நெல்லின் உத்தரவாதவிலை சம்பந்தமான அவரதுயோசனை, நெல்உற்பத்தி செய்யப்படும் இடங்களிலிருந்து நெல், அரிசி கொண்டுபோவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை ஆதியனயாவும் ஓர்கம்யூனிஸ்த சகாப்தத்திற்கான திட்டங்களேயாகும்; இவைகள் நமது தனிப்பட்ட சுதந்திர உரிமைகளைப் பறிப்பனவாகும்; எதேச்சாதிகார மந்திரிஒருவரின் கீழ் நம்மை அடிமைத்தனத்தில் ஆழ்த்தும்நடவடிக்கைகளைஎதிர்த்து ஒன்றுபட்டுக் குரல்எழுப்புமுகமாகவே நாம் இங்குகூடியிருக்கிறோம்” என அன்று ஓர் விசேஷகூட்டத்தில் தமிழ்ப்பிரமுகர்ஒருவரும், “மக்களின் அரசாங்கம்எனப்படுவது உணவுமந்திரியின்கீழ் ஓர் எதேச்சாதிகார அரசாங்கமாக மாறிவருகின்றது” என்று மற்றோர்பிரமுகரும், “இந்தநாட்டை ஓர் கம்யூனிஸ்தநாடாக்குவதற்காக நாங்கள் இந்தஅரசாங்கத்தை வாக்களித்து அனுப்பவில்லை”யென்று ஓர்சிங்களப்பிரமுகரும் கூறியிருக்கின்றனர். இவ்வாறான அபிப்பிராயங்கள் இந்நாட்களில் பலவாகும்.

நிற்க, அன்றொருநாள் நடைபெற்ற அரசாங்ககட்சிக் கூட்டத்திலே, “கம்யூனிஸத்தை இலங்கைக்குள்புகுத்த நான்ஒருவரையும் அனுமதிக்கப்போவதில்லை” யென ஒருவர்கூறினர். இலங்கையைக் கம்யூனிஸ்தநாடாக்க அரசாங்க கட்சியிலுள்ளசிலர் முயல்வதாக மற்றொருவர் முறையீடுசெய்தார். ஒருகாலத்தில் உலகமுழுவதும் கம்யூனிஸத்தையே ஏற்றுக்கொள்ளுமென்று உணவு-விவசாயமந்திரிகூறியதை ஆதாரமாக எடுத்துக்காட்டி, இலங்கை கம்யூனிஸத்தையே ஒப்புக்கொள்ளாவண்ணம் கடைசிவரைதான்போராடப் போவதாகவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஜனநாயக சோஷலிசத்தையே ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினர். இந்நாட்டில் தொல்லைகள்ஏற்பட உணவு-விவசாயமந்திரிதான் பொறுப்பாளியென்று தென்மாகாணத்தோட்டத்துரை மார்சங்கம் கூறுகின்றது. “மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கத்திலே முற்போக்குச்சக்திகளுக்கும், பிற்போக்குச்சக்திகளுக்குமிடையே இருந்துவரும் பிளவு நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது; நெருக்கடியின் உச்சநிலையை நோக்கி நாம் போய்க்கொண்டிருக்கிறோம்; சீக்கிரம் ஓர்பாரதூரமான போராட்டம் ஏற்படுவதைத் தடுக்க முடியா”தென்று உணவு-விவசாயமந்திரி கர்ச்சனைசெய்கின்றார். இவ்வாறாகப் பிரதமர் பண்டாரநாயக ஜனநாயக சோஷலிசமென்று அரசாங்கத்தின் அரசியற்கொள்கையை வரையறுக்க, உணவு-விவசாயமந்திரியோ தனதுபோக்காலும், செயலாலும் சர்வாதிகார சோஷலிசகொள்கையை வரையறுப்போராய்க் காணப்படுகின்றார். இந்தமட்டிலே திரு. பண்டாரநாயகா பெயரளவில் பிரதமராயிருக்கலாம்; ஆனால், செயல்களைப்பொறுத்தவரை அப்பதவியை வகிப்பவர் உணவு-விவசாயமந்திரியேயென்று அரசியல்வட்டாரங்கள் பேசிக்கொள்வதில் ஆச்சரியமில்லை. பிரதமர் திட்டமிட்டிருக்கும்சோஷலிசம் வீழ்ச்சியுற்று, உணவு-விவசாயமந்திரி தனதுபோக்காலே திட்டமிடும் சர்வாதிகார சோஷலிசம் - அதாவது கம்யூனிஸம் தலைதூக்குமானால் அது இலங்கையின் துரதிர்ஷ்டமேஎன்க.

---

## தமிழ்மொழி ஒப்பந்தம்

தனிச்சிங்களசட்டம் அரங்கேற்றப்பட்டது, தமிழ்ப்பேசும்மக்களைத் தட்டிக்கழிக்கவேயென்று அப்போது ஒருபாலார் அபிப்பிராயங்கூறினர். நியாயமான தமிழ்மொழி உபயோக விஷயமாய்க் கைச்சாத்தான பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தமானது தமிழ்ப்பேசும்மக்களைத் தாக்காட்டுவதற்கேயென்று மற்றோர்பாலார் அபிப்பிராயம்கூறினர். ஆனால், செட்டியார்சிங்காரிக்குமுன் பட்டணம்பறிபோனவாருசத்தான் கருமம்நடக்கும்போல் இப்போது புலப்படுகின்றது. சென்ற 1957-ம்ஆண்டு ஆடிமாதம் 25-ந்திகதியன்றிரவு பிரதமர்-செல்வநாயகம் ஒப்பந்தம் கையெழுத்தானது. இலங்கையின் சரித்திரத்திலேயே அரசாங்கத்துக்கும், ஓர்அரசியல்கட்சிக்குமிடையில் ஒப்பந்தம்ஒன்றுக்குக் கைச்சாத்திடப்பட்டது இதுவே முதன்முறையாகும். அங்ஙனமாக, தமிழ்மொழிச்சட்டம் இதோவருகிறது, பிரதேசசபைகளின்சட்டம் அதோவருகிறதென்று வழியேவழிபார்த்திருந்த தமிழ்ப்பேசும்மக்கள் அவைகளைநடைமுறைக்குக் கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தாலும், தனிச்சிங்களசட்டத்தின் கொடுமைகளாலும் ஏமாற்றமும், சலிப்பும் அடைந்தவர்களாய்க் காணப்படுகின்றார்கள். சென்றசுதந்திரதினமன்று நிகழ்ந்தபொதுக்கூட்டத்திலே தலைவர்களின் சொற்பொழிவுகள் தமிழிலும் மொழிபெயர்க்கப்படுமாறு வற்புறுத்திப் பிறநாடுகளின் தலைவர்களுக்கு இலங்கையின் ஜனநாயகபோக்கைப் பகிரங்கமாகக்காண்பித்துள்ள பிரதமர் இன்று வட, கீழ்மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டுவரும் சிங்களஸ்ரீஇலக்கத் தகடுகள்பதித்த பஸ்களின் பாதுகாப்புக்காகச் சிங்களஸ்ரீயுடன் தமிழ்ச்ஸ்ரீயும் பொறிக்குமாறு உத்தரவிட்டிருந்தால் தமிழரசுக்கட்சி நிர்வாகசபை இம்மாதம் 29-ந்திகதி ஆரம்பிக்கவிருக்கும் சிங்களஸ்ரீஎதிர்ப்புஇயக்கத்துக்கு இடமேற்படாதன்றோ; உயர்தரவகுப்புகளில் சிங்களம்மட்டுமே போதனாமொழியாக இருக்கச் செய்யவேண்டுமென்று எடுத்துக்கொண்டமுயற்சியால் ஏற்கனவே தமிழ்ப்பேசும் மக்களின்மனதில் ஓர் குரோதத்தை உண்டுபண்ணியஒருசிங்களவரை—திரு. செனிவிரத்தினாஎன்பவரைச் சர்வகலாசாலைக்கம்மிஷனுக்கு ஓரேயொரு இலங்கையராகப் பிரதமர் நியமியாது, அவரோடு ஓர்தமிழரையும்நியமித்திருந்தால் இந்தக்கம்மிஷனைத் தமிழர்கள்அனைவரும் பகிஷ்கரிக்கவேண்டுமென்ற கிளர்ச்சிஏற்படாதன்றோ! தமது சமூகத்தினருக்குக் கொடுக்கும்உரிமையும், சந்தர்ப்பமும் போன்று இந்நாட்டுப்பிரசைகளில் மற்றோர்பிரிவினரான தமிழருக்கும் பிரதமர்கொடுக்கநினையாததென்ன? சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழச்செய்வதற்குப் பிரதமர்எடுத்துவரும்பிரயத்தனங்கள் இவைதானா? அம்மட்டா! தேசீயமயமாக்கப்பெற்று, இலங்கைப்போக்குவரத்துச்சபையின் கண்காணிப்பிலே பிரயாணசேவை நடத்திவரும் பஸ்களிலே தமிழர்-சிங்களவரென்ற பாகுபாடு காண்பிக்கப்படுவதாகச் சொல்லப்படுவதும், இந்தப்பஸ்கள்செல்லும் இடப்பெயர்கள் ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமேபொறிக்கப்பெற்று, தமிழ்புறக்கணிக்கப்பட்டு, தமிழரானபிரயாணிகள் ஏமாந்து உலைந்து கஷ்டப்படுவதும், உத்தியோகபாஷைப் பகுதியிலிருந்து தமிழ்மொழியை முற்றாகஒழித்து, அதனைச் சர்வசிங்களமயமாக்கி விடுமாறு திட்டப்படிகாரியங்கள் நடப்பதாகச் சொல்லப்படுவதும், பிறவுமெல்லாம் தமிழ்மக்களின் மனதைப்புண்படுத்தி அவர்கள் பரலோகமட்டாய் அபயமிடத் தூண்டமாட்டாவா? அரசாங்க கட்சிஅங்கத்தவர்களிடையே அப்படியும், மந்திரிமார்களிடையே இப்படியுமானால் சிங்களர்-தமிழரிடையே எப்படி ஒற்றுமையும், சமாதானமும் உண்டாகப்போகுமோ தெரியவில்லை.

---

### உயர்தரகல்விபயிலச் செல்கின்றார்

காலிமேற்றிராசனத்திலே பிறர்சிநேககன்னிகாசபையைச்சேர்ந்த கிறீஸ்துவின் சங். சிஸ்றர்பிரான்சிஸ்கா அவர்கள் உயர்தரகல்விக்கென்று லண்டன்நகருக்கு அனுப்பிவைக்கப்பெற்றிருக்கின்றார். இவர் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியராயிருந்துஇளைப்பாறிய திரு. எஸ். அகஸ்ரீன்அவர்களின் புதல்வியும், தோலகட்டிச்செபமாலைத்தாசர்சபைச் சிரேஷ்டரான வண. பி. ஏ. தோமஸ்சுவாமிகளது சகோதரியின் புதல்வியுமாவர். இம்மாதம் 6-ந்திகதியன்று இவர் கொழும்பிலிருந்து எஸ். எஸ். ஆர்காடியாஎனும்கப்பலிலே லண்டன்நகருக்குப் பயணமாயினர். அவ்வேளை இவரின்பெற்றோரும், சகோதரங்களும், மற்றோரும் ஜெற்றியிலேசமூகமாயிருந்து அவரைப்பயணமனுப்பிவைத்தார்கள். சிஸ்றர்பிரான்சிஸ்கா தமதுஉயர்தரகல்வியை முடித்துத்திரும்ப மூன்றுவருடங்கள்செல்லுமென அறிகின்றோம்.

### உணவுமந்திரியும் கம்யூனிஸமும்

“நாம் வகுப்புப்பேதமின்றியே வெள்ள அபாயத்திலிருந்து வெளிவந்தோம்; வெள்ளம்வந்தபோது தமிழர், சிங்களவரென அது பாகுபாடு காட்டவில்லை; எல்லாச்சமூகத்தினரும் ஒன்றாகஒத்துழைத்து வெற்றிபெற்றோம்; ஆனால், இப்போது கம்யூனிஸமென்ற வேறோர் அபாயம் உணவுமந்திரிமூலம் வந்திருக்கிறது; பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களும், நெற்காணிச்சட்டமும், நெல் நிர்ணயவிலையும், அரிசியை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அனுப்புதற்கு விதிக்கப்பட்டுள்ளதடையும் கம்யூனிஸத்தைப் புகுத்தும் உணவுமந்திரியின் வழிகள்; திரு. பிலிப்குணவர்த்தனாவின் போக்கை நாம்எதிர்க்கவேண்டும்” என்று வடஇலங்கை விவசாய அபிவிருத்திச் சங்கதலைவர் திரு. என். பொன்னம்பலம்அவர்கள் சென்ற 13-ந் திகதி நடந்தேறிய சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டிருக்கின்றார்.

---

● இந்தியா இவ்வருடம் 23கோடி ரூபாகடனும், அடுத்தவருடம் 35 கோடி ரூபாகடனும், 1960-ம் ஆண்டு 92 கோடிரூபாகடனும் திரும்பச்செலுத்த வேண்டும். இந்தக்கடன்களைத் தீர்ப்பதில் அதிகசிரமம் ஏற்படமாட்டாது. ஆனால், 1961-ம் ஆண்டு 123 கோடி ரூபாகடனும், 1962-ம் ஆண்டு 107 கோடி ரூபாகடனும் திரும்பச் செலுத்துவதில்தான் அதிகசிரமம் ஏற்படுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

### ஆசனக்கோவிலில் ஞானஒடுக்கம்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலையும், சுண்டிக்குளி சஞ்சுவாம்கோவிலையுஞ்சேர்ந்த ஆண்பாலாரான கிறீஸ்துவர்களின் தபசுகால ஞானஒடுக்கம் இம்மாதம் 23-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமைசாயந்தரம் ஆரம்பமாகி அடுத்த 30-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை முடிவாகும். வண. எஸ். பீற்றர் சுவாமியவர்களே ஞானபோதகஞ் செய்யவிருக்கின்றார்.

### பரிசுத்த அடைக்கலமாதா கோவில்

யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலமாதாகோவிலில் நடைபெறும் தபசுகால ஞானவொடுக்கம் நாளை 21-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 6-30 மணிக்கு ஆரம்பமாகி அடுத்துவரும் ஆறும்வெள்ளிக்கிழமை பரிசுத்தவியாகுலமாதா திருநாளன்று திவ்வியபூசையுடன் முடிவாகும். வண. எல். ஜே. அகஸ்ரீன்சுவாமியவர்கள் ஞானவொடுக்க போதகஞ்செய்ய விருக்கின்றார். ஆறும் வெள்ளிக்கிழமை காலை 5-30 மணிக்குக் கல்வாரியிலே திவ்வியபலிபூசைநடைபெறும். அன்றுசாயந்தரம் 7மணியளவில் கல்லறைத்திருச்சுரூபவணக்கம் வழமைபோல நடந்தேறும்.

### சேவாலியர் ஞாபக வித்தியாவெகுமதி

காலஞ்சென்ற பரதகுலப்பிரமுகர் செவாலியர் ஐ. எக்ஸ். பெரேறு அவர்களைக் கௌரவிக்குமுகமாக அவரின் ஞாபக வித்தியாவெகுமதிஒன்று பரதகுலமக்களாலும், அவரதுநண்பர்களாலும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வித்தியாநிதியின் நிபந்தனைகளின்படி, கொழும்பு அதிமேற்றிராசனத்திலே குருமாராகஆசிக்கின்ற மாணவர்களுக்கே இந்தவித்தியாவெகுமதி வழங்கப்படும். அதனால் மனுப்பத்திரங்கள் கொழும்பு அதிமேற்றிராணியாருக்கே அனுப்பவேண்டியன.

### பதநீரும் சீனிச்செய்கையும்

வாரத்துப்பனை பனம்பொருள்சங்க கூட்டம்ஒன்று சென்ற 12-ந்திகதியன்று நடைபெற்று, அதிலே யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் பேசியபோது: சீவற்தொழிலாளர்கள் முன்வந்து பதநீரிலிருந்து சீனிதயாரிக்க முயற்சியெடுப்பதைப் பாராட்டலாயினர். இம்முயற்சியில் அவர்கள் பதநீரை ஒருகலன் 30 சதவீதம் கொடுத்துதவினுல் குறித்த காலஎல்லைக்குள் இறக்குமதியாகும்சீனியுடன் போட்டியிடலாமென்றும், தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்திலும், நாட்டின் சுகவாழ்விலும் நிச்சயமான புதியதிருப்பத்தை எதிர்பார்க்கலாமென்றும் அவர் கூறலாயினர். பதநீர் கிடையாத காலத்திலே பன்னவேலை, கூடைபின்னல், நெசவுசெய்தல்முதலான குடிசைக்கைத்தொழில்களில் ஈடுபடவேண்டுமென ஆலோசனைகூறிய அரசாங்கஅதிபர் பதநீரிலிருந்து சீனி தயாரிக்கும் நிலையம்ஒன்றைஅமைக்க மூவாயிரம்ரூபா நன்கொடையளிப்பதாக உறுதியளித்தார்.

### சித்திரைமாதக் காணிக்கச்சேரி

யாழ்ப்பாணப் பகுதியைச்சேர்ந்த மத்தியவகுப்பினரான தமிழ்மக்களுக்கெனக் காணிக்கச்சேரிஒன்று வருகிற சித்திரைமாதம் யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் நடத்தப்படுமெனத் தெரியவருகிறது. காணி கோருவோரின் விண்ணப்பங்களெல்லாம் இம்மாதம் 31-ந் திகதிவரையும் அவரால் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் காணிக்கச்சேரியினுல் பூநகரியில்மட்டும் 3,000 ஏக்கர்நிலமும், துணுக்காய்ப்பகுதியில் 2,000 ஏக்கரும், முல்லைத்தீவு-பரந்தன் வீதியையடுத்து 2,000 ஏக்கரும் யாழ்ப்பாணமக்களுக்குப் பகிர்ந்துவழங்கப்பட விருக்கிறது. விண்ணப்பப்பத்திரங்களை யாழ்ப்பாணக்கச்சேரியில் எவரும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

### கிறீன்ஆஸ்பத்திரிப் புதியடக்ரர்

தென்னிந்தியாவிலுள்ள பிரபல வேலூர் மிஷன் ஆஸ்பத்திரியில் வைத்தியதொண்டாற்றி அனுபவம்வாய்ந்தவரும், சத்திரசிகிச்சையில் திறமைவாய்ந்தவருமாகிய டக்ரர்தங்கம்மா வர்கீஸ்அவர்கள் இம்மாதமுதல் மானிப்பாய்க் கிறீன்ஆஸ்பத்திரியில் கடமையாற்றிவருகிறாரென அறிகின்றோம்.

### காலநிலை

நெடுநாள் அகோரவெயிலுக்குப்பின் சென்றபுதன்கிழமையும், வியாழக்கிழமையும் இவ்விடம் ஒவ்வோர்பாட்டம் நல்லமழை பெய்திருக்கிறது. இந்த மழை பொதுவாக யாழ்ப்பாணத்தின் சகலபகுதிகளிலுமே பரக்கப்பெய்திருப்பதாகத் தெரியவருகிறது. தற்போது நெல்அறுவடை, சூடுமிதிப்பு நடக்குங்காலமாதலால் இந்தமழை அவற்றைஓரளவில் பாதித்துள்ளது.

### கொலைகளும் விபத்துமரணங்களும்

இலங்கையிலே சென்றவாரஇறுதியில் ஆறுகொலைகளும், ஓர்விபத்துமரணமும் நிகழ்ந்திருக்கின்றன. இவற்றுடன் இவ்வருடத்திலே சென்ற 16-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைவரையிலுள்ள 75 தினங்களிலும் இலங்கையில் நிகழ்ந்துள்ளகொலைகள் 106 விபத்தினுல்ஏற்பட்டமரணங்கள் 62. இந்தப்பங்குனி மாதத்தின் முதல் 15 தினங்களிலும் இலங்கையில் நிகழ்ந்த கொலைகள் 25. விபத்தினுல் ஏற்பட்ட மரணங்கள் 6.

### தமிழரசுக்கட்சித் தலைவர்

தமிழரசுக்கட்சியின் புதியதலைவராகப் பாராளுமன்றத்திலே திரிகோணமலைப்பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. என். ஆர். இராசவரோதயம்அவர்கள் தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார். கீழ்மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழரசுக்கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பெற்றிருப்பது இதுவே முதன்முறையாகும். இக்கட்சியின் அடுத்த வருடாந்தமகாநாடு வவுனியாவிலே அடுத்தவைகாசிமாதமுதல் வாரத்தில் நடைபெறவிருக்கிறது.

### ஆசிரியைகளின் சேவைகாலம்

அரசாங்கஉதவிபெறும் பாடசாலைகளிலே கடமையாற்றும் ஆசிரியைகளை 60 வயதுவரையும் சேவைசெய்ய அனுமதிப்பதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இதுவரை அவர்கள் 55 வயதுவரையும்தான் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். கல்விச்சட்டம் திருத்தப்படும்வரையிலே 55 வயதுக்குமேற்பட்ட ஆசிரியைகளைச்சேவையில்வைத்திருக்கப் பாடசாலைகளின் முகாமைக்காரருக்கு அனுமதியளிக்கப் பட்டிருக்கிறது

### காணிமந்திரிக்குப் பாராட்டுரை

பரந்தன் சந்தைமண்டபத்திலே சென்ற 12-ந்திகதியன்று தென்யாழ்ப்பாணக் கமக்காரர்சங்கஆதரவில் நடைபெற்றகூட்டத்தில் கரைச்சிக் கிராமச்சங்கதலைவர் திரு. கா. நாகலிங்கம் அவர்கள் பேசியதாவது: "நாட்டின் சுபீட்சத்துக்கு உயிர்நாடியாகவிளங்கும் விவசாயமந்திரி பிலிப் குணவர்த்தன சர்வாதிகாரப்போக்கிலே திட்டங்களைவகுத்துக் கமக்காரரைத்திணறடிக்கப்பண்ணுவது வருந்தத்தக்கது. நெல்லின்உத்தரவாதவிலையைப் பத்துரூபாவாகக் குறைக்க அவர்எடுத்துக்கொண்டமுயற்சி படுதோல்வியடைந்தமை ஏழைக்கமக்காரருக்கெல்லாம் மகிழ்ச்சிக்குரியதே. ஏழைகளுக்காகத் தீவிரமாகஉழைத்து அதில்வெற்றிகண்ட காணிமந்திரி சி. பி. டி சில்வாவுக்குக் கமக்காரராகியநாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்" என்பதே.

## மட்டக்களப்பு
## தாண்டவன்வெளித் தபால்

**பங்குத்தேவாலய ஆண்டுவிழா:**

புராதனப்பெருமைவாழ்ந்த எமபங்குத்தேவாலய திருநாளுக்கு ஆரம்பமாக உரியவைபவங்களுடன் மாதாவின் கொடிஏற்றிவைக்கப்பட்டது. மழை, வெள்ளம், காற்று, புசல் ஆதியவற்றைக் கவனியாது பங்குக்கிறீஸ்துவர்கள் நோவனைகளைப் பத்திச்சிறப்பாகக் கொண்டாடிவந்தார்கள். திருநாளுக்கு முந்தியஒருவாரமாகப் பங்குக்குருவால் மாதாவின்மகிமையைவிளக்கும் அரிய பிரசங்கங்கள் செய்யப்பட்டன. தினமும்செபமாலை, பிரார்த்தனைக்கீதம், தேவநற்கருணைஆசீர்வாதம், தேவதாயாரின் திருச்சுரூபஆசீர்வாதம்என்பன அருட்சிக்குரியவிதமாக நடைபெற்று வந்தன.

சனிவாரம் மாதாவின்சுத்திகரத் திருநாளுக்குமுந்தினம் மாதத்தின் முதல் சனிக்கிழமை அதிகாலை எமதுபங்கைச் சேர்ந்தபாத்திமாகிரியில் பாட்டுப்பூசை நிறைவேறியது. அன்றுபகல்முழுவதும் விடாதுபெய்துகொண்டிருந்த மழையையும்பொருட்படுத்தாது பங்குக்கிறீஸ்துவர்கள் மாதாவலம்வரும் வீதிகளை அலங்கரித்தார்கள். பிற்பகல் 6-30மணிக்கு வானம்வெளித்தது. மழையுமஒய்ந்தது. மாதாவின்கருணையே நிகழ்ந்தது. ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. ஒலிபரப்பி பரிமளித்துக் கொண்டிருந்தது. பலவிடங்களிலுமிருந்து வந்துகுழுமிய பக்தர்களும், மற்றும்பத்திச்சபையினரும், பங்குக்கிறீஸ்துவர்களும், தத்தம் விருதுகளுடன் பாடசாலைப்பிள்ளைகளும் அணியணியாகச் செபங்கள், பாடல்கள், மெழுகுவர்த்திதீபங்களோடு நடந்து செல்கின்றனர். அவர்களைத்தொடர்ந்து தேசோமயமாகச் சிங்காரிக்கப்பெற்றிருந்த மோட்டார்ரதத்திலே—சரோலையிலே தேவதாயார், காணிக்கைத்தாயார், எமதுபங்கின்பாதுகாவலாளியான அன்னைமாமரி பங்குக்குருவரும், பக்தர்களும் புடைசூழப் பவனிவருகிறார். பவனிவந்து, ஆலய முன்றிலில் அழகுற்றுவிளங்கியபீடத்தில்எழுந்தருளிய துமபிரார்த்தனைக்கீதம்பாடப்பட்டது.

அதன்மேல் வண. பிரான்சிஸ் எம். செலர்சுவாமிகளால் தேவதாயாரைப் பற்றிச் சிறந்ததோர் பிரசங்கஞ்செய்யப்பட்டதும், பங்குக்குருவரை நடுவிடமாகக்கொண்டு வண. எவ். எம். செலர், வண. ஏ. டெல்மாமூர் சுவாமிகள்துணைபுரிய மாலையாராதனை பாடப்பட்டது. பின்னர்எல்லோரும் ஒன்றுகூடிக் குருமனைசென்று வாத்தியவரிசைகளோடு திரிகோணமலை மேற்றிராசன ஆயர் மகாவந். இக்னேஷஸ்கிளென்னி ஆண்டவர்அவர்களைப்பங்குக்குருவர்சமேதராய் ஆலயத்துக் கழைத்துவந்ததும், அவரால்திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. அவ்வேளைபங்குக்குருவர் தாண்டவன்வெளிப்பங்கைத் தேவதாயாருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார். பின்னர் காணிக்கைநாயகியின் திருச்சுரூபஆசீர்வாதம் அருளப்பட்டது.

மறுநாள் 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்குக்குருவால் திவ்வியபலிபூசை நிறைவேற்றிச் சுத்திகரத்திருநாள் பற்றிச் சிறந்ததோர் பிரசங்கஞ்செய்யப்பட்டது. 7மணியளவில் மெழுகுவர்த்திகள் ஆசீர்வதிக்கும் திருச்சடங்கும், தொடர்ந்து ஆலயவீதிவழியே மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரமும் நடந்து, பின்னர்பாடற்பூசையாக 2-ம் பூசை பங்குக்குருவால்நிறைவேறியது. பிற்பகல் செபமாலை, பிரார்த்தனை, தேவநற்கருணை ஆசீர்வாதத்தின்பின் கிறீஸ்துவர்கள்புடைசூழப் பங்குக்குருவால் மாதாவின்கொடி இறக்கப்பட்டுத் திருநாள்இனிதேமுடிவானது.

**அர்ச். செபஸ்தியார்திருநாள்:**

நமதுபங்கிலுள்ள பரிசுத்தவியாகுலமாதா ஆலயத்தில் 23-2-58ஞாயிறுவாரம் அர்ச். செபஸ்தியார் திருநாள் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. திருநாளுக்குமுந்தினம மாலை செபமாலை, பிரார்த்தனை, அர்ச். செபஸ்தியாரின் சீவியவரலாறுபற்றிய பிரசங்கம் நடந்தேறின. பின்னர் அன்பர்ஒருவரால் அளிக்கப்பெற்ற அர்ச். செபஸ்தியாரின் திருச்சுரூபம் இரண்டாம்முறையாக ஆலயவீதிவழியே சுற்றுப்பிரகாரமாக எடுத்துச்செல்லப்பட்டதைத்தொடர்ந்து பங்குக்குருவால் மாலை ஆராதனை பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதமும், அர்ச். செபஸ்தியார் திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பட்டன. மறுநாள் பாடற்பூசையோடு திருநாள் இனிதே முடிவாயிற்று. இத்திருநாள் எமது பங்கிலே செபஸ்தியாரின் பெயர் கொண்ட மக்களால் கொண்டாடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## செயற்கை ஞாயிறு

இங்கிலாந்திலுள்ள அடலர்மாஸ்றன் நகரில் "மூன்றும் செங்கோல்"எனும் அணுஉலையில் ஒருகோடி டிகிறி சென்ரிகிறேட் உஷ்ணத்தை உற்பத்திசெய்துள்ளனராம. இவ்வருடமுடிவிற்குள் நான்குகோடி டிகிறி சென்ரிகிறேட் உஷ்ணமுள்ள செயற்கைச்சூரியனைச் செய்துமுடிக்கும் திட்டத்தில் பிரித்தானியவிஞ்ஞானிகள் தீவிரமுயற்சி செய்துவருகின்றார்கள். டியூறியமும், டிறீடியமும் கலப்பதாலேயே இத்தகைய அதிகஉஷ்ணமுடைய செயற்கைச்சூரியனைச் செய்யமுடிகிறதாம்.

பிரித்தானிய விஞ்ஞானிகள் செய்துவரும் செயற்கைச்சூரியன் அலுமீனியத்தால் செய்யப்பட்டுள்ளது. 12 அங்குல விட்டமுள்ள குழாய் அதன்நடுவில் பொருத்தப்பட்டுள்ளது. இந்தச் செயற்கைச்சூரியன் வட்டவடிவமாகக் காட்சியளிக்கிறது. இவ்வட்டத்தின் விட்டம் சுமார் நான்குஅடியாகும். சிலருக்குச் செயற்கைச்சூரியனைப்பற்றியசெய்தி புதிதாகவிருப்பினும் உண்மையில் ஏழுவருடங்களாகப் பிரித்தானியவிஞ்ஞானிகள் இத்துறையில் ஈடுபட்டுள்ளனர். இந்த 7 வருடங்களிலும் ரூஷியரும்தூங்கிக்கொண்டிருக்கவில்லை. 1940-ம் ஆண்டிலேயே ரூஷியர் செயற்கைச்சூரியனை வானத்தில் சிருஷ்டித்துக் காண்பித்தனராம்.

## சலமோன் இராசாவின்
## புதல்வரது கல்லறை

முப்பதுவயதுடைய ஓர்அமெரிக்க குருவான வண. பிறெடெறிக் ரிறம்புள்சுவாமியார் "அபிசீனியசக்கிரவர்த்தி மெனெலிக்"கின் கல்லறையைத் தேடிக்கண்டடைவதற்காக ஆபிரிக்காவின்மகாஉந்நதமான மவுண்ட்கிளிமன்ஜரோமலைமீதுஏறியிருக்கின்றார். பாரம்பரியம் கூறுகிறபடி, இந்தச்சக்கிரவர்த்தியே சலமோன்இராசாவினதும், ஷெபாஇராணியினதும் புதல்வராவர். இவரின்கல்லறை 19,317 அடிஉயரமான மலையின்உச்சியில் இருந்துவருவதாக உத்தேசிக்கப்படுகிறது. அநேக நூற்றாண்டுகளாகத் தலைதலைமுறையாகச் சொல்லப்பட்டுவரும்சங்கதிப்படி, அங்குதானே தனதுகல்லறையை அமைக்கும்படியாக அவர் கட்டளையிட்டிருந்தாராம். கிளிமன்ஜரோ மலையடிவாரத்தில் சஞ்சரித்துவருகின்ற மசேசாதியினர் அதனைக் "கடவுளின் மனை"யென்று அழைத்து, அதன்உச்சியில் அவர் வசிக்கிறாரென நம்புகின்றனர். வண. ரிறம்புள்சுவாமியாரும், அவருடன் செல்லும் ஆராய்ச்சிக்கோஷ்டியின் தலைவரான ஜொகானெஸ்பேர்க் நகரைச்சேர்ந்த திரு. ஜோண் ரன்ஸ்ராலும் அம்மலையிலே 16,000 அடிஉயரத்திலுள்ள குகைஒன்றில் இருப்பதாகக் கருதப்படும் யானைச்சேமக்காலையைக் கண்டுபிடித்துவிடலாமென்ற நம்பிக்கையுடையோராய்க் காணப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான்நகரில் காணப்படும் புராதன தமிழ் ஏடுகள்

— தனிநாயக அடிகள் —

தனியரசாகவிருந்து பொதுஅரசு போல அறம் குடையாக, அருள் கோலாகத் தம்ஆட்சியை நிறைவேற்றுவதால் உலகப்பெரியார்கள் பாப்பாண்டவரைக் கண்டும், அவர்ஆலோசனைகளைக்கேட்டும், அவருடைய நடுநிலையை விரும்பியும் வருகின்றனர். சென்ற உலகப் பெரும்போர்களில் சமாதான உடன்படிக்கை நிறைவேற்றுமாறும், சிறைக்கைதிகள் தாய்நாடு திரும்ப வேண்டுமென்றும், போரின் கொடுமையைக் குறைக்க வேண்டுமென்றும், பாப்பாண்டவரும், அவருடைய ஸ்தானிகர்களாக வெவ்வேறு நாடுகளில் உள்ளோரும் பெரிதும் உழைத்துவந்தனர். வத்திக்கான் அரசு உலகில் அறத்தின்ஆற்றலையும், சமயத்தின் ஆற்றலையும் நன்கு புலப்படுத்துகின்றது.

## தமிழ் ஏடுகள்

மேலும் பாப்பரசர்கள் கலைவாணருக்கும், புலவருக்கும், அறிஞருக்கும் புரவலராக என்றும் விளங்கியிருந்திருக்கின்றனர். அவ்வள்ளற் றன்மையாற்றான் அவர்கள் அரண்மனையும், நூற்கூடங்களும், சிற்றாலயங்களும் கணக்கற்ற கலைச்செல்வங்களுக்குக் கோயில்களாக இன்றும் அமைந்து இலங்குகின்றன. வத்திக்கான் நூற்கூடத்தில் அரிய நூல்கள் உள்ளன. அந்நூற்கூடத்திலுள்ள புத்தகங்கள் மறைத்துறையைச் சார்ந்தன மட்டுமன்றி, ஏனைய துறைகளையும் சார்ந்தவை. உலகிலுள்ள பழைய ஏடுகள், கையெழுத்துப் பிரதிகள் முதலியவற்றைப் பாப்புமார் பெரும் விலைகொடுத்துப் பெற்றுத் தம்நூற்கூடங்களில் வைத்திருந்தனர். நெப்போலியன் உரோமாபுரியைக் கொள்ளையடித்த காலத்தில் பாப்புமாரின் பல ஏட்டுப் பிரதிகளையும் பிரான்சிற்குக் கொண்டுசென்றான்.

ஆயினும், எந்த மொழிக்குமுரிய அரிய நூல்களையும் இந்நூற்கூடத்தில் இன்றும் காணுதல்கூடும். வத்திக்கான் நூற்கூடத்துக்குப் பண்டைத் தமிழ் ஏடுகளையும், கையெழுத்துப் பிரதிகளையும், பழைய அச்சேற்றிய நூல்களையும் தேடுதற்பொருட்டு இருமுறை சென்றிருந்தேன். அப்பொழுது என்முயற்சிக்குத் தகுந்த உவகையைப் பெற்றேன். இந்திய மொழிகளில் முதல் அச்சுக்கண்ட மொழி தமிழ் மொழியே.

பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் கத்தோலிக்ககுருமார் தமிழ் அச்சகமொன்றைக் கொச்சினுக்கு அண்மையிலுள்ள அம்பலக்காட்டிலும், கொல்லத்திலும், தூத்துக்குடியிலும் நிறுவினர். (பலஅச்சகங்களை நிறுவினரோ, அன்றேல் ஒரேஅச்சகத்தின் இடத்தை மாற்றினரோ அறியோம்.) ஆயினும், பதினாறும் நூற்றாண்டிலே வெவ்வேறு ஆண்டுகளில் மூன்று நூல்களாயினும் அச்சேறியதாக அறிந்திருந்தேன். அவற்றுள் இரு நூல்களைப் பற்றியே தமிழ் ஆராய்ச்சியாளர் சிலர் அறிந்திருந்தனர்.

வத்திக்கான் நூற்கூடத்திலுள்ள பண்டைய இந்தியநூல்கள் யாவற்றையும் ஆராய்ந்து செல்லும் பொழுது ஸ்பானிய முகவுரையுள்ளதும், 660 பக்கங்கள் கொண்டதுமாகிய பெரிய நூல் ஒன்றையும் ஆராய்ந்தேன். இதுவே அறிஞர் பல ஆண்டுகளாகத் தேடிய "திருத்தொண்டரின் மலர்" எனும் நூலென்று அகச்சான்றுகள் பலவற்றிலிருந்து துணிந்தேன். நான் ஐரோப்பாவுக்குப் பன்முறை சென்றதால் ஏற்பட்ட செலவிற்கும், எடுத்த முயற்சிக்கும் இந்நூலொன்றைக் கண்டுகொண்டதே போதியதாகும் என்று கருதுகின்றேன். அப்பொழுது நான் அடைந்த மகிழ்ச்சியை ஆராய்ச்சியில் ஈடுபடுவோரே அறிவர். அதேவேளையில் இன்னுமொரு அரிய நூலையும் கண்டேன். பதினேழாம் நூற்றாண்டில் அச்சிடப்பெற்ற தமிழ் – போர்த்துக்கேய அகராதியொன்றை எவரும் கண்டிலர் என்று தமிழ் அகராதி ஆசிரியர் கூறியிருந்தனர். அவ்வகராதியின் அச்சுப்பிரதியை வத்திக்கான் நூற்கூடத்திலேயே கண்டிருக்கின்றேன். இன்னும் சில தமிழ் ஏடுகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் பார்வையிட்டேன். வத்திக்கான் நூற்கூடத்திலும், ஏனைய ஐரோப்பிய நூற்கூடங்களிலும் நாம்அறியாத சில அரியநூல்கள் இருத்தல்வேண்டும். அவற்றைத் தேடிப் பதிப்பிப்பது தமிழ் அறிஞர்க்குரிய சிறந்தவொரு தொண்டாகும்.

## வத்திக்கான் நூதனசாலை

வத்திக்கான் நூற்கூடத்துக்கு அண்மையில் உள்ளது வத்திக்கான் நூதனப் பொருட்சாலை. அங்குள்ள பலஅறைகளில் பெயர்பெற்ற சிலைகளும், ஓவியங்களும், பழம் பொருட்களும் உள. பண்டைய எகிப்தியர், கிரேக்கர், உரோமருடைய சிலைகள்பல அப்பொருட்சாலையில் உள. அங்குள்ள சிலைகளில் மக்களின் கவனத்தைக் கவரும் இருசிலைகள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று பெல்வதேரி அப்பொல்லோ. அப்பொல்லோ என்பது கிரேக்கர், உரோமர் முழுமுதற் கடவுளுக்கு அளித்த ஒருபெயர். அவர் கட்டழகுடைய உடலமைப்பும், எல்லையற்ற அழகுஒழுகும்முகத்தையும்உடையவர் என்று மக்கள்அவரைப் போற்றிவந்தனர். அக்கடவுளின் முருகுஅமைந்த தோற்றத்தைச் சலவைக்கல்லில் இழைத்த சிற்பியின்திறம் அச்சிலையால் பளிங்குபோலக் காட்டப்பெற்றிருக்கின்றது. மக்கள் இனத்தின் ஆக்கப் பணியின் உயர்வை இணையற்ற முறையில் அச்சிலை காட்டுகின்றது. இன்னும் ஒரு சிலை வருத்தத்தையும், வேதனையையும் காட்டும் இலாவக்கூன் சிற்பத்தொகை. இலாவக்கூன் என்னும் கிரேக்கர் ஜுனோவென்னும் தேவதையின் சதியொன்றை எதிர்த்துப்பேசியதால் அவளுடைய வெகுளிக்கு ஆளாயினர். கடலிலிருந்து இருபாம்புகள் வந்து அவரையும், அவருடைய இருசிறுவரையும் தம்உடல்களாற் சுற்றியும், தம்நஞ்சால் மயக்கியும் கொன்றனவென்று புராணம் கூறும். தந்தையும், மக்களும் பாம்புகளின் தளைகளில் அகப்பட்டுப் படும் வேதனைகளையும், தளைகளிலிருந்து தப்ப முயல்வதையும், தந்தையின் வேதனையை மகன்பார்த்து வருந்தும்துயரத்தையும், பக்தியையும் சிற்பி கல்லும் கவி சொல்லுமாறு செதுக்கியுள்ளார்.

## ஓவிய கூடங்கள்

வத்திக்கானிலுள்ள ஓவியகூடங்கள் பல. பாப்புமார்வாழ்ந்த அறைகள்பலவற்றில் பெரும் ஓவியர் படங்களைத் தீட்டியதால் அவ்வறைகளும் இன்று ஓவியக்கூடங்களாக மக்களால் பார்வையிடப்பெற்று வருகின்றன. இறப்பியேலின் அறைகளென்று அழைக்கப்படுவன அவ்வோவியரால் மறைவரலாற்றுத் தொடர்புள்ள பெரும்நிகழ்ச்சிகள் தீட்டப்பெற்ற அறைகளாம். பாப்புமார் சிலவேளைகளில் வழிபாடு நிறைவேற்றும் சிஸ்ரைன் சிற்றாலயம் மிக்கேல் ஆஞ்சலோவின் சுவர் ஓவியங்களால் அணிசெய்யப்பெற்றது. அதன் முகட்டின் உட்புறத்தில் தீட்டிய ஓவியங்களை அண்ணாந்துபார்ப்பதில் கழுத்துவலியுண்டாகும். மிக்கேல் ஆஞ்சலோ மனிதஉடலை அருந்திறமையுடன் தீட்டியிருக்கின்றார். பல்வேறு வரலாறுகளை இணைத்து யேசுவின் பெருமையைப் புகட்டியுள்ளார்.

ஆதாம் ஏவாளெனும் முதல் ஆணையும், பெண்ணையும் அவரவர் இயல்புகள் புலப்படுமாறு ஓவியங்களில் காட்டியுள்ளார். மிக்கேல்ஆஞ்சலோவின் "இறுதித்தீர்வை" எனும் சுவர்ஓவியம் உலகமுடிவில் நல்லோருக்கு விண்ணுலகையும், தீயோருக்கு நரகஉலகையும் யேசுபெருமான் அளிக்கும் காட்சியைக் காட்டுகின்றது. அங்குள்ள சுவர் ஓவியங்கள் நாளடைவில் சிறிதுமங்கிப் போவதையும், சுவர்கள் வெடிப்பதையும் தவிர்க்க வல்லுனர் விடாது முயன்றுவருகின்றனர்.

# மனிதனே! மண்ணாயிருக்கிறாய்...

(சி. எஸ். நாயகம் — பத்தாவத்தை, இளவாலை)

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்தஞானஆஸ்தி இரண்டுவகைப்படும். ஒன்று, "பாவ்ஆஸ்தி." மற்றது, "புண்ணியஆஸ்தி." நரகமும், மோட்சமும் நித்தியமாயிருப்பதால் அவற்றிற்குரியஆஸ்தியும் நித்தியமாயிருத்தல் வேண்டும். உலகஆஸ்தி உலகவாழ்வுக்கு அகத்தியம் வேண்டியிருப்பதுபோலப் புண்ணியஆஸ்தி மோட்சவாழ்வுக்கு அகத்தியம்வேண்டும். உலகில் பணம்இல்லாதவன் பிணம்என்பார்கள். அதேபோல் மோட்சவாழ்வுக்குப் "புண்ணியப்பணம்" இல்லாவிடில் அவன் மறுவுலகுக்குப் பிணமாயிருக்கிறான். உலகஆஸ்தி உலகுக்குரியதானாலும் அதைக்கொண்டு என்றுமழியாத நித்தியபேரின்பத்துக்குரிய ஞானஆஸ்தியைத் தேடும் பொருட்டுத்தான் உலகஆஸ்தி நமக்குத் தேவனால் கொடுக்கப்படுகின்றது. மற்றப்படி பாவத்தேட்டத்திற்கல்ல.

"மனிதனே மண்ணாயிருக்கிறாய்; திரும்பவும்நீ மண்ணாய்ப்போவாய்" என்னும் மரணத்தீர்வை நம்மெல்லோர்க்கும் தேவதீர்வையாகும். தேவசுதன்மனிதனாய்ப்பிறந்தமையால் அவரும், அவரின்நிர்மலதாயாருமேமரணத்துக்குள்ளானார்களெனில் பின்னர் பேசுவானேன்? நாம் எத்தனை சுகபலமுள்ளவர்களாய் இருந்தாலென்ன, செல்வம்செல்வாக் குடையவர்களாய் இருந்தாலென்ன, அழகுசோபனமுடையவர்களாய் இருந்தாலென்ன ஓர் நாள் நாம் மரணத்திரையுள் மறைய வேண்டியவர்களே. ஆகவே, நாம்மரணத்தை எப்போதும் மனக்கண்முன்பாகவைத்துச் சீவித்துவரவேண்டும். ஏனெனில், "சாவைநினைக்கில்பாவமில்லை" என்றும், "மகனே! உன் அந்தியமுடிவுகளை நினைத்து, உன்பாவவழியைவிட்டுநட" என்றும் தூயஆவியானவர் எச்சரிக்கின்றார். அர்ச். ஞானப்பிரகாசியார் ஓர்கபாலஓட்டைஎப்போதும் தமதுமேசைமேல் வைத்திருந்து மரணத்தின்பேரில் தியானஞ்செய்து சரீரமெடுத்த ஓர்சம்மனசுபோல் சீவித்துப் பரிசுத்தம்பரிமளிக்க மரணித்தார். இவ்விதமே "மரணசிந்தனை" எத்தனையோபேரைப் புண்ணியவான்களாக்கிவிட்டிருக்கிறது.

உதாரணமாக, அர்ச். பிரான்சீஸ்கு போஜியார் செல்வம்செல்வாக்குடைய உயர்குலத்தில் பிறந்தவர். கல்விசாஸ்திரங்கள் இனிதேகற்றுத்தேர்ந்தவர். அரசசேவையில் படிப்படியாக உயர்வு பெற்று ஈற்றில் அத்தேச பிரதமமந்திரியாயிருந்தவர். அக்காலத்திலே அரசரின்தேவியான இசபெல்லா இராக்கினி தனக்கு ஒப்பாரும்மிக்காரும் இல்லாதவகையிலே ஓர்அழகுஇராணியாக உலகப்பிரசித்தி பெற்றுவிளங்கினாள். கடைசியாக இந்தஇராணியும் சணக்குவந்து கடினநோய்கண்டு மரித்தாள். ஒருவாரம்வரையிலே அவளின்பிரேதம் ஓர்பேழையில் சகலருடையவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இராசகட்டளைப்படி, அடக்கத்துக்கு வேண்டிய சகலஒழுங்குகளையும் செய்யும்பொறுப்புப் பிரதமமந்திரியான போஜியாவிலே விடப்பட்டது. பேழையில்வைக்கப்பட்டிருந்த அழகுஇராணியின் பிரேதத்தை அதுவரை அவர் பார்க்கவில்லை. சேமக்காலையிலே கல்லறையில் வைக்கப்படவேண்டிய நேரம் அண்மியதும், "இப்பேழையில் இக்கல்லறையில் சேமிக்கப்பட்டிருக்கும் பிரேதம் இசபெல்லா இராக்கினியுடையது" என்று தாம் கைச்சாத்திட்ட உறுதிப்பத்திரத்தை ஒழுங்குமுறைப்படி அந்தப்பேழையினுள் வைப்பதற்காக அதன் மேல்மூடியைத் திறக்கக் கட்டளையிட்டார். அவர் கட்டளைப்படி அது திறக்கப்பட்டதும் ரோசாமலர்போல் அழகு பொலிந்து விளங்கிய அவள்வதனம் துர்க்கந்தமும், அவலட்சணமும் நிறைந்து பார்ப்பதற்கே மிகவும் அருவருப்பும், அச்சந்தருவதுமாயிருப்பதைக் கண்டார். கண்டதும் அதே இடத்தில்தானே அவருக்கு ஞானோதயமுண்டாய், "உலகமே, அழகே, மாயமே! இன்றே உனக்கு என் பிரியாவிடை" என்று கூறி, அன்றே தமது பதவியிலிருந்து விலகினார். உலக சுகபோகங்களைத் துறந்து யேசுசபையில் சேர்ந்து பெரிய அர்ச்சியசிட்டராக மரித்து இன்று திருச்சபையில் மாண்புற்றுத் திகழ்கின்றார்.

இத்தாலியிலே உலகநாட்டங் கொண்ட ஓர் இளைஞன் ஓர்நாள் அர்ச். பிலிப்புநேரியோரைக் காணச் சென்றான். அப்பொழுது அவர் புன்னகையுடன் அவனைநோக்கி: "தம்பி! நீ இப்போது என்ன செய்கிறாய்?" என்று வினவினார். இளைஞன் மறுமொழியாக: "இப்போதுநான் கல்லூரி ஒன்றில் படித்துவருகிறேன் சுவாமி" என்றான். நல்லது, உனது கல்லூரிப் படிப்பை முடித்ததும் உனது வாழ்க்கைத்திட்டம் என்ன? கல்வித்துறையில் படிப்படியாக உயர்ச்சி பெற்று ஓர்பெரிய பட்டதாரியாக முயல்வேன். மெத்த நல்லதுதம்பி! பிற்பாடு என்ன செய்வாய்? பிற்பாடா சுவாமி! நான் ஓர்உயர்ந்த உத்தியோகம் வகித்து, நல்ல சம்பளம்பெற்றுச் சப்பிரமமாக வாழ்வேன். மெத்தச் சந்தோஷம், பிற்பாடு என்ன செய்வாய்? பிற்பாடா சுவாமி! தகுந்தஇடத்திலே ஓர்சம்மந்தஞ்செய்து, மக்களைப்பெற்று, சீராய்ச் சிறப்பாய், நாலாபேரும் மதிக்க வாழ்ந்துவருவேன். சுவாமியார் அவ்வளவில் நின்றுவிடாது சம்பாஷணையைப் பின்னருந்தொடர்ந்து அவனைநோக்கி: மெத்தநல்லதுதம்பி! ஆனால், இன்னும் ஒரு கேள்வி. பிற்பாடாவதென்ன? இந்தக்கேள்வி அவனைத் திணறவைத்தது. என்னவிடை பகர்வதெனத் தெரியாது திகைத்தான். ஏதாவது உபாயமெடுத்து ஏதுஞ் சொல்லலாமா என்று வெகுவாகச் சிந்தித்தான். ஈற்றில் உண்மையை உணர்ந்தவனாய்ச் சுவாமி, பிற்பாடென்ன! நான் மண்கிடங்குக்குப் போகவேண்டியதுதான் என்றான். அப்போதே அவனுக்கு ஞானக்கண் திறந்தது. அர்ச்சியசிட்டரின் பாதங்களில் வீழ்ந்தான். தனது உலக நாட்டத்தைவிட்டுத் துறவறம் பூண்டு பரிசுத்தமாகச் சீவித்துப் பாக்கியமான மரணமடைந்தான்.

ஆகவே, மரணத்துக்கு நாமெல்லோரும் உட்பட்டவர்கள். அதற்கு நாம் போக்குச்சொல்லித் தப்ப இடமில்லை. கம்பத்தில் ஏறிக் கரணமடிக்கிறவன் ஈற்றிலே கம்பத்தடியில் வீழ்வதுபோல் நாமும் உலககம்பத்தில் என்னதான், எப்படித்தான் கொடிபறக்கச் செல்வம் செல்வாக்காய்—பிரபல்யமாய்ச் சீவித்தாலும் ஓர்நாள் தப்பாமல் சவக்குழி சேர வேண்டியவர்களே. அதனால், இந்தத் தபசுகாலத்தைப் பயன்படுத்திக் கடைத்தேற நம்மாலியன்றமட்டும் வருந்துவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

வெளித்தோற்றம் உண்மைப் பொருளைமறைக்க இடங்கொடாதேயுங்கள்.

திருச்சபையின் மக்களில் சிலர்அல்ல, அநேகர் திருச்சபையின் படிப்பனைக்குமாருக நடந்தாலும் திருச்சபையின் உண்மைக்கு அழிவில்லை. திருச்சபைத்துறவிகள், குருமார் அதன்போதகத்தை மறந்து நடந்தாலும் திருச்சபையின் உண்மைக்குப் பங்கமில்லை.

வைத்தியர்சிலர் தகுதியற்றமுறையில் நடந்துவிட்டால் வைத்தியத்தொழில் பிழையாகுமா? வழக்கறிஞர்சிலர் தமது ஆதீனரின் பணத்தை அநியாயமாய் அப்பிக்கொள்வதால் நியாயவாதத்தொழில் கெட்டதாகுமா?

புற்றுநோயைக் குணப்படுத்தச் சத்திரசிகிச்சை செய்வது சரியா எனக் கூறுவதற்கு நீங்கள் போதிய வைத்தியசாஸ்திரம் கற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, நீங்கள் வைத்தியநிபுணரிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

உங்கள் சமயஅறிவு அதிஆழமான தல்ல. எனவே, அதில் நிபுணரைக் கேட்டறியலாம் அல்லவா? அதற்கென ஏழுவருடங்கள் செலவழித்தவர்களிடம் விசாரிப்பது போதாவிடின் தமது ஆயுள்முழுவதையும் வேதஆராய்ச்சியிற் செலவழித்தவரையாவது கேட்டுஅறியலாமே.

மதவிடயங்களில் அநேகவாலிபர் தங்களைவிடத் தெரிந்தவர்கள் இல்லைஎன்ற விதமாய் எண்ணிக்கொள்வது எவ்வளவு பரிதாபமானது. எவர்கூறும் ஆட்சேபனைக்கும் சமாதானங்கூறத் திருச்சபை ஆயத்தமா யிருக்கிறது என்பது ஞாபகத்தி லிருக்கட்டும்.

அண்ணு.

—※—

## அன்பு

உலகம் உய்யவேண்டுமானுல் ஒவ்வொருவன் உள்ளத்திலும் அன்பு பெருக்கெடுத் தோடவேண்டும். அன்புமயமாக இருக்கவேண்டியமனிதன் இஞ்ஞான்று அக்கிரமம்நிறைந்து காணப்படுகின்ருன். ஆசையின் காரணமாக எவ்வளவு அக்கிரமங்கள் நிகழ்கின்றன. மனிதனெனப் பெயர்கொண்டு மிருகத்திலும்விடக் கேவலமான கொடூரசுரூபியாய்த் திகழும் அவ்னும் மனிதனு?

"ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும்காட்டு"என்று சொன்னுரே, அவர் யார்? அன்பின் திருவுருவாய்ச் சிலுவையிலே தொங்குகின்ருரே! உடலிலும், உள்ளத்திலும், செயலிலும், வாக்கிலும் அன்பு பரிமளிக்கின்ருர்! மனிதர்மேல் வைத்த அன்பினுல் உலகம் முடிவுவரையும் திவ்விய சற்பிரசாதத்தை ஏற்படுத்தினுரே! "பிதாவே! நீர் என்னிலும், நான் உம்மிலும் இருக்கிறதுபோல் அவர்களும் நம்மிடத்திலும், ஒன்ருய் இருக்க வேண்டிக்கொள்கிறேன்" என்ருரே அவர்யார்? அவர்தான் அன்புமயமான யேசுஇரட்சகர். நம்மை உண்டாக்கிய தேவன் அன்பினுல் இவ்வுலகில் மனிதஅவதாரஞ் செய்தார். அப்படியாயின் அவரால் படைக்கப்பட்டநாம் ஏன் ஒருவர் ஒருவரோடு அன்பாய் இருக்கக் கூடாது?

துன்பங்கள் எல்லாவற்றையும் நீக்குவதற்கு மனிதன் அன்புருவாகத் திகழவேண்டும். "பிறர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்று சுவிசேஷம் முழக்குகிறது. ஆகையால், அன்பைக்கொடுத்தே அன்பைப்பெறவேண்டும். மற்றவர்களிடத்தில் நாம்அன்புசெலுத்துகிருேமென்ருல் அதைநாம் எப்படிக் காட்டவேண்டும்? அவர்களைப் புகழ்வதினுலல்ல, அவர்களுக்குத் தொண்டுசெய்வதினுல். அதுவே உள்ளத்தின் உண்மையான அன்புக்கு அறிகுறி. மற்றவையெல்லாம் பொய், பகட்டு, வெறும் வேஷமேதவிர வேறல்ல. அன்புள்ளவனின் வாக்கே அமுதத்திலும் இனியது.

அன்பே மனிதனின் உயர்நிலை. அன்பில்லாதவன் தோலால்போர்த்தப்பட்ட வெறும்எலும்புக் கூண்டுதான். "எனக்கு நானே நன்மை செய்வதைவிட மற்றவர்களுக்கு நன்மைசெய்து ஆயிரம் நகரங்களுக்கும் செல்லநான் தயாராய் இருக்கிறேன்"என்று விவேகானந்தர் கூறுகின்ருர். உபகாரியாயிருந்து உபகாரஞ்செய்து உபகாரியாகவே உயிர்விடுவதற்கு அவருக்குள்ள ஆர்வத்தைப் பார்த்தாயா?

அதிகாரஆசை, பெருமை இவ்விரண்டிலும் நாம்அதிகம் சாக்கிரதையாய் இருக்கவேண்டும். தலைவன் நான்என்று சொல்லிக்கொண்டு முன்வந்தால் என்னைத்தலைவனுக ஏற்றுக்கொள்ள முன்வருபவர்கள் யார்? வெற்றிபெற விரும்பின் 'நான்'என்ற சாத்தானைக் கொன்றுவிட வேண்டும். பெயர், புகழ், தலைமைத் தானம் முதலியவைகளைத் திரும்பிப் பார்க்கக்கூடாது. நாம் நம்முடைய கடமையைச் செய்தால் உலகம் நமக்குத் தன்னுடைய கடமையைக் கட்டாயம் செய்தேதீரும். ஒவ்வொரு நாட்டினரும் அன்புக்கொடியில் புஷ்பித்த நறுமணம்மிகுந்த பெருமலர்களைத் தன்சிகைமீது சூடிக்கொள்ளவில்லையா? விவேகானந்தரைத் தமிழ்நாடு பொன்னேபோல் போற்றிக் கௌரவிக்கவில்லைய? மோகனதாஸ், காந்தியின் மரணசெய்திகளைக் கேட்டு ஐக்கியநாட்டுச் சபைமுதல் உலகிலுள்ள ஒவ்வொருநாடும் இரத்தக்கண்ணீர் வடிக்கவில்லையா?

ஆகையால், நாம்வாழ்வது மக்கட்குப் பணிசெய்யவேயென்று உணரவேண்டும். அவ்வுணர்ச்சியே நமது தியாகங்களை வெளிப்படச் செய்யும். நாம் ஓர்நாள் நமக்கிடப்பட்டமோட்ச இராச்சியத்துக்கு அருகதையாவோம் என்பதுதிண்ணம்.

ஞா. தியாகராஜா,
இளவாலை.

சுவிசேஷ விளக்கம் — 4.

## திருப்தி தருவது

"மிகவும் அலுப்பாயிருக்கிறது" என்றுகூறிச் சௌந்தரி இன்னெரு முறுக்கை வாயில்போட்டாள். "உமக்கு அலுப்பாயிருந்தாலும் முறுக்குச் சுடக்கூடிய கெட்டிக்காரியல்லவா?" என்ருன் துரை. "ஆம், கெட்டிக்காரிதான்" என்று சொன்னுள் மலர். "மத்தியானம் சாப்பிடும் நேரம்நீர்தான் அதிகஅலுப்புக் காட்டுகிறவ"ரெனத் துரைசொன்னுன்."

"துரை! என்னை அப்படிச்சொல்ல உமக்கு என்னஅறிவு!"

"என்னவாயிருந்தாலும், இப்பொழுதுநீர் அலுப்புக்கொள்ளக் காரணமில்லை. ஆறுமுறுக்குத்தின்ருல் யாருக்குத்தான் அலுப்பாயிருக்கும்" என்ருன் துரை. சமையல் அறைக்குள் நடந்தவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அமிர்தநாதர் "என்னுடைய ஆசைமகளாரே! என்னத்தையிட்டு உமக்கு அலுப்பாயிருக்கிறதுஎனக் கூறமுடியுமா?" என்றுகூறி உள்ளேவந்தார்.

"அதுதான் அப்பா நூதனம். எனக்கே தெரியவில்லை. இன்று வெள்ளிக்கிழமை; மச்சாளும் இங்கே இருக்கும்பொழுது, முறுக்குச் சாப்பிடும்வேளையிலே ஏன்அலுப்பு உண்டாகிறதோ அறியேன் அப்பா", என்ருள் சௌந்தரி.

அமிர்தநாதர் ஒருமுறுக்கை எடுத்துக் கடித்துக்கொண்டு, "அது நூதனமில்லை மகளே! சிலதருணங்களிலே அலுப்பு உண்டாகிறதற்குக் காரணமே தெரியாமற்போகிறது. எம் மனதைப் பூரணமாய்த் திருப்திப் படுத்தும் உணவு ஒன்றேஒன்றுதான்" என்ருர். "அதுஎன்னமாமா" என்றுகேட்டாள்மலர். கடவுள்தாமே அதைத்தந்தார். அதில்சேர்க்க வேண்டியகூடு இன்னதென்று அவரேகூறியுமிருக்கிருர்; "என்னை அனுப்பினவருடையசித்தத்தை நிறைவேற்றுவதே என்உணவு" என்றது ஞாபகமிருக்கிறதா? தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதுதான் எங்களுக்குப் பூரணதிருப்திதரும். மற்றவை—முறுக்கு, படம்பார்க்கிறது போன்றவைசொற்பசந்தோஷத்தை மாத்திரந்தரும். ஆனுல், ஒருகாரியம் இல்லாவிட்டால் — அதாவது தேவசித்தத்தை நிறைவேற்றும் குணம்—இல்லாவிடில் நாம்மிகவும் கவலையுள்ளவர்களாவோம்."

"அதற்காகத்தான் நாம் நீதியைப் பற்றிப் பசியுந் தாகமுங்கொள்ள வேண்டுமாக்கும் மாமா" என்று கேட்டாள் மலர்.

"அப்படித்தான். சிலவேளைகளில் இதுபெரிய வில்லங்கம். தேவசித்தத்தை நிறைவேற்றுவது எப்போதும் இலகுவாயிராது. ஆகையால் தூயஆவியானவர் தைரியம்எனும் கொடையைத் தருகிருர். நீதியையிட்டுப் பசிதாகங்கொள்ளுகிறவர்கள், தேவசித்தத்தை நிறைவேற்ற முயற்சிப்பவர்கள் திருப்தியடைவார்கள். சிலநேரங்களிலே சௌந்தரியைப்போல அலுப்புஅனுபவிக்கக் கூடும். ஆனுல், அது கஷ்டமில்லை. ஏனெனில், உள்ளத்தின் அடித்தளத்திலே, அவர்கள் சந்தோஷமாயிருக்கிருர்கள். பரமநன்மையினுல் நிரம்பியிருக்கிருர்கள்" என்ருர் அமிர்தநாதர்.

அமிர்தநாதர் சிரித்துக்கொண்டு, "அலுப்புத்தட்டிய என் மகளார் சுட்டமுறுக்கில் இன்னென்று சாப்பிடலாமா? என்ருர். "தாராளமாகச் சாப்பிடுங்கள்அப்பா, இப்பொழுது எனக்கு ஒரு அலுப்பும் தோன்றவில்லை" என்ருள் சௌந்தரி.

"அதற்குள்ளாகச் சீஷர்கள்: குருவே, சாப்பிடும்என்று அவரைமன்ருட, யேசுநாதர் அவர்களைநோக்கி: நான் சாப்பிடுவதற்கு நீங்கள் அறியாத ஒரு போசனம் எனக்கு உண்டுஎன்ருர். ஆகையால், சீஷர்கள் ஒருவர் ஒருவரை நோக்கி: யாராகிலும் அவருக்குச் சாப்பிடக் கொண்டுவந்தானே என்ருர்கள். யேசுநாதர் அவர்களை நோக்கி: என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய வேலையைச் சரிவரமுடிப்பதே எனக்குப் போசனமாயிருக்கிறது." (அரு. 4 : 31-34.)

—※—

### நேரம் உண்டு

நீ எவ்வளவு முயற்சியாயிருந்த போதிலும் வீட்டுக்கு வந்தவர்களுடன் பேச,
தினத்தாளை வாசிக்க,
அடுத்தவீட்டாருடன் அளவளாவ,
புடவைக்காரருடன் விலைகுறைப்பதுபற்றி வாதாட,
அடுத்தவீட்டில் வைக்கோல்குவிக்கிறதைப் பார்க்க,
மரக்கறி விற்பவளுடன் வம்பளக்க
உபயோகமற்ற கடிதம்எழுத,
ஐந்துநிமிடம் உண்டாகில்
வருத்தமாயிருக்கும் சிநேகிதனுக்காக மன்ருட,
கிறிஸ்துநாதர் அனுசாரத்தில் ஒரு அதிகாரம் வாசிக்க,
கடவுள் நாள்தோறும் காட்டும் கருணையைப்பற்றிச் சிந்திக்க,
சிலுவையை நினைவுகூர,
தேவன் எம்மைக் காப்பதற்கு நன்றிகூற,
விசுவாச, நம்பிக்கை, நேசமுயற்சி செய்ய,
எமது உதவி தேவைப்படுவோருக்கு ஒரு பர. ஒரு பிரி. செபிக்க,
வாசலிலிருக்கும் திருஇருதயப் படத்தைப் பார்த்து அவருக்குஎல்லாம் ஒப்புக்கொடுக்க,
ஞானநன்மை அனுபவிக்க
ஐந்துநிமிட நேரம்உண்டு.

### விசுவாசக் குறைவு

கசைஅடிகளும் சிலுவைமரணமும் கண்ணுக்கினிய காட்சிகள்அல்ல. சேவகனுடைய ஈட்டி யேசுவின் விலாவைக் குத்தித்திறந்து இரத்தமுந் தண்ணீரும் ஓடச்செய்ததில் அவர் என்னஅனுபவித்தார்எனநாம் சற்றே ஊன்றியோசிக்கவேண்டும்.

இதெல்லாம் எம்அன்பின்நிமித்தம் எமக்காக அவர் கொடுத்த கிரயம்.

இதைஅறிந்தும் எம்மில் அதிஊக்கமான அநேககிறீஸ்தவர்கள் எமது விசுவாசஆழத்தை அறியாமல்மாத்திரமல்ல, கடவுளைப்பற்றிய சிந்தனையே இல்லாமல் திரிகிருர்கள்என்பது உண்மை.

கர்த்தாவே, எமதுவிசுவாசக் குறைவை நிவிர்த்திசெய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவளனர் ஆசிரியபயிற்சிக் கலாசாலை, கொழும்புத்துறை.

## ஞானோபதேச தத்துவப் பத்திரம்

சிரேஷ்ட உயர்தர வகுப்புகளில் ஞானோபதேசங் கற்பிக்கத் தகைமையுள்ள ஆசிரியர்களைக் கத்தோலிக்க பாடசாலைகளுக்கு அளிக்கும்பொருட்டு மேற்படி கலாசாலையில் விசேஷ பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சியில் சித்தியடையும் ஆசிரியர்கட்கு **"ஞானோபதேச தத்துவப் பத்திரம்"** அளிக்கப்படும்.

1957-ம் ஆண்டில் பயிற்சி முடித்து வெளியேறிய ஆசிரியர்களுள் ஞானோபதேசப் பயிற்சியில் சித்தியடைந்தோரின் பெயர்கள் கீழ் தரப்படுகின்றன. இவர்களுக்கு அடுத்துவரும் வைகாசிமாதம் பழையமாணவர் தினக் கொண்டாட்டத்தின்போது அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

**ஆண்கள் :**

1. ச. அமிர்தநாதர், நெடுந்தீவு.
2. சே. அந்தோனிப்பிள்ளை, பண்டத்.
3. ப. பெனடிக்ற், விடத்தல்தீவு.
4. பி. ச. லம்பேட், வங்காலை.

**பெண்கள் :**

1. இ. அன்னமேரி, மண்டைதீவு.
2. சங். சிஸ். மேரி தியோபன், இளவாலை.
3. ம. கிறிஸ்ரீனம்மா, சில்லாலை.
4. சு. எலிசபேத், புலோலி.
5. பெ. இயூஜின், குடாப்பாடு.
6. ம. இருதய றீற்றம்மா, நாரந்தனை.
7. சங். சிஸ். மேரி கத்தறீன், இளவாலை.
8. பெ. மேரி மில்லி, வெள்ளவத்தை.
9. வி. பெர்னதேத், மணற்சேனை.
10. பா. மேரி பிபியானா, பருத்தித்துறை.
11. இ. மேரி சிசில், யாழ்ப்பாணம்.
12. சங். சிஸ். மேரி எலொய்சா, அச்சுவேலி.
13. பி. மேரி யோசேப்பின், அளவெட்டி.
14. சங். சிஸ். மேரி வில்லியோசா, அச்சுவேலி. (திறமையுடன்)
15. அ. மேரி மாகிறேற், சில்லாலை
16. சங். சிஸ். லூயிஸ்மேரி, இளவாலை.
17. சங். சிஸ். மேரி கிளாறிஸ், இளவாலை.
18. சங். சிஸ். மேரி லொறென்ரீனா, இளவாலை,
19. சி. றீற்றா சந்திராவதி, யாழ்ப்பாணம்

கொழும்புத்துறை,
19-3-1958.

**சுவாமி வ. தியோகுப்பிள்ளை**
(அதிபர்)

# கேள்விப்பத்திர அறிவித்தல்

## யாழ்ப்பாண மாநகரசபை

**பஸ்நிலையத்தை உள்ளடக்கிய காலையின் வாடகைப்பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரம் — 1958**

கீழ்வரும் பஸ்நிலையத்தை உள்ளடக்கியகாலையின் வாடகைப்பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம், மாநகரசபைக் கொம்மிஷனரால் 31-3-58-ந்திகதி பிற்பகல் 4-30மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இக் கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப்பத்திரத்தில் தயாரிக்கப் பட்டனவாகவும், அரக்குமுத்திரை இடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 31-3-58-ந்திகதி பிற்பகல் 3மணிவரை வழங்கப்படும்.

| சந்தைகள் முதலியவற்றின் பெயர். | கேள்விப் பத்திரங்களின் விலை. | கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய பொறுப்புப் பணம். | கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரிசு உறுதிக்காகச் செலுத்தவேண்டிய கட்டணம். |
|---|---|---|---|
| 1. பஸ்நிலையத்தை உள்ளடக்கியகாலை 1-4-58-ம் திகதிமுதல், 30-6-58-ம் திகதிவரை | 10-00 | 250-00 | 150-00 |

இதரவிபரங்களைக் கீழே கையொப்பம் இட்டிருப்பவருக்கு எழுத்துமூலம் விண்ணப்பித்து அறியலாம்.

**கட்சன் செல்வராசா,**
பதில் மாநகரசபைக் கொம்மிஷனர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 17-3-58.


DEVOTIONS TO THE HOLY FACE OF OUR LORD -/25 cts.
DEVOTIONS TO ST. JUDE (Patron of Desperate Cases) -/35 cts.

*Availablo at :*
**THE CATHOLIC BOOK DEPOT,**
Norris Road, Colombo
AND
**ST. JOSEPH'S CATHOLIC PRESS, JAFFNA.**


### நன்றித்துதி

ஏறக்குறைய 40வருடமாய் என்தகப்பனை ஓர்அசுத்த அரூபிபீடித்து அவர் புத்தியைத்தடுமாறப்பண்ணிக் குடும்பத்தில் பெரும்தொந்தரவைக் கொடுத்துக் கொண்டுவந்தது. அந்தப்பிசாசை அவரிடமிருந்துஅகற்றி நல்லறிவைக் கொடுத்துக் குடும்பத்தில் சமாதானம்அளிக்கும்படியாக பரிசுத்த சதாசகாயமாதாவிடம் "ஓ! மகிமைப்பிரதாபம்நிறைந்த மோட்ச இராக்கினியே! சம்மனசுக்களின் அதியுன்னத ஆண்டவளே" எனத்தேவமாதா தாமே வெளிப்படுத்திய செபத்தையும் செபமாலைபத்தி ஒவ்வொன்றும் ஓதி ஒப்புக்கொடுத்து மன்றாடிவந்ததுமன்றி, அர்ச். மிக்கேல்சம்மனசானவரிடமும், எங்கள் ஊர்ப்பாதுகாவலராம் அர்ச். வனத்துஅந்தோனியாரிடமும் நம்பிக்கையோடு மன்றாடிவந்தேன். மன்றாடத் தொடங்கிய ஒருவருடகாலத்துள் அந்த அரூபிமாயமாய் அகன்றதுமன்றித் தகப்பனரிடமிருந்த குணம்குறிகள்எல்லாம் மாறிவீட்டிலும் சமாதானம் ஏற்படலாயிற்று. இதுநடந்து இருவருடங்களாகின்றன. நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கப் பிந்தியகுற்றத்தை அவர்கள் மன்னிக்கும்படிகேட்பதுடன் அவர்களின்நாமம் என்றென்றும் புகழப்படவும்விரும்புகிறேன்.

**W. M. Fernando**

# கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 564**

சுண்டிக்குளி
கனகசபை சின்னையா
— வழக்காளி.

எதிராக
கரையூர்
1. அவுறன் யோசையும்,
2. பெண் எலிசபேத்தும்.
கரையூர்
3. ருயப்பு கிறகோரியும்,
4. பெண் சிசிலியாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் M. B. 564-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1958-ம்ஆண்டு சித்திரைமாதம் 30-ந்திகதி புதன்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 669/80-உம், 10-10-55 தொடக்கம், 21-12-55வரைக்கும் ரூபா 370/-க்குப் 12%வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 155/30-உம்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று, கரையூர்இறை. "நீலன் குடியிருப்பு" நில. பர. (¼) நாலிலொன்றும், வீடும், மற்றும் இதற்குட்பட்டவைகளும். எல்லை: கிழக்கும், வடக்கும் — றோட்டு. மேற்கு — அந்தோனிப்பிள்ளை பெண் சிசிலியாவின் ஆதனம். தெற்கு — யேக்கப் பெண் கிளாறுவின் ஆதனம். இதடங்கலும்.

**தி. ந. ஆசீர்வாதம்,**
கொம்மிஷனர்.

நம். 21, 2-ம்குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
17-3-1958

# EDUCATIONAL

Pitman and L. C. C. qualified Stenographer will take in girl students for tuition in Shorthand and Type-writing. If desired, they will be prepared for the Pitman's Shorthand Typist Certificate, the London Chamber of Commerce, Complete or Part Higher Certificate for Short-hand Typists, G. C. E. Ord. Level, Adv. Level and other examinations.

**N. B. Those who do not possess their own Type-writers will be allowed to practise at our machines between 9 and 11 a. m. and 3 to 4 p. m. paying a monthly fee of Rs. 5/- per half-hour. Sufficient machines are available for beginners and for advanced students. Time need not be wasted in waiting for turns.**

Apply in person to :—

(Miss) M. M. Thuraisingham,
20, Third Cross Street,
Jaffna.

● வடஅயர்லாந்திலே அன்றிம் நகரிலுள்ள தனதுஇல்லத்தில் அன்று வெள்ளிக்கிழமை திருமதி நோரு பிளாக்குஸ்ரன் எனும்மாது காலஞ்செல்லலாயினுள். புரொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிய இந்த மாதுசெய்துள்ள அநேகதர்மக்கைங்கிரியங்களில் மேற்கு ஆபிரிக்காவிலே கட்டியெழுப்பிய மூன்றுகத்தோலிக்க கோவில்களும் அடங்கியுள்ளன. இவளின்நாயகர் அந்நாட்டின் பாராளுமன்றத்தில் ஓர் அங்கத்தவராயிருந்துவந்தார்.

● போலிஷ்மாணவர்கள் குருப்பட்டத்திற்குப்படிக்க ரோமாபுரிக்குச் செல்லப்படாதென்று விதித்திருந்த தடையைப் போலிஷ்கம்யூனிஸ்த அரசாங்கம் தற்போது நீக்கிவிட்டிருக்கின்றது. இந்தத்தடையானது சென்ற உலகயுத்தத்தின்பின் அங்கு ஆட்சிசெய்தஸ்ராலினிஸ்தஅரசாங்கத்தாலே விதிக்கட்பட்டிருந்தது.

● இங்கிலாந்து முழுவதிலுமுள்ள கிறிஸ்தியன்பிறதர்மாரின் கல்லூரிகளைச்சேர்ந்த சுமார் ஆயிரம்மாணவர்கள் ஒன்றுசேர்ந்து அடுத்தஈஸ்றர்விடுமுறைகாலத்தில் லூர்துபதிக்கு யாத்திரைசெய்ய விரும்புகின்றனர்.

● வருகிற 1959-ம்ஆண்டு மாசிமாதம் 11-ந்திகதி முடிவடையவிருக்கின்ற நூற்றாண்டுவிழா வருடத்திலே லூர்துபதியில் இரவோ பகலோ எந்த நேரத்திலும் திவ்வியபூசை நிறைவேற்றலாம். பிரான்சிய மேற்றிராணிமார்களது வேண்டுகோளின்பேரிலே அவ்விதம் நிறைவேற்றப் பாப்பரசர் அனுமதிவழங்கியிருக்கிறார். விசுவாசிகளும் எந்தநேரத்திலும் திவ்விய நன்மை பெற்றுக்கொள்ளலாம்.

● லூர்துபதிக்கு யாத்திரிகர்களை ஏற்றிச்செல்வதற்கென "கே. எல். எம்." என அறியப்படுகின்ற றோயல் டச் எயர்லைன்ஸ்கம்பெனியானது இவ்வருடத்திலே 14 ஜெற்விமானங்களை அமர்த்தியிருக்கின்றது. இந்தவிமானங்கள் தீவிரகெதியுள்ளனவும், அமைதியானபிரயாணத்துக்கு வசதிபண்ணுவனவுமாகும். இவற்றில்ஒன்று முதன்முதலாகச்சமீபத்தில் அம்ஸ்றர்டாம் நகரிலிருந்து றோமைநகருக்குப் பறந்து செல்லலாயிற்று.


**NEW LITURGY**
FOR
**HOLY WEEK**
in English and Latin
St. Andrew's Edition
Paper Cover Rs. 2-00
Cloth ,, 3-00

*Apply to :*
**St, Joseph's Catholic Press, Jaffna.**


### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் இரக்கத்தால் நான் வேண்டிக்கொண்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். அதற்கு என் இதயம்நிறைந்த நன்றியைத் தெரிவித்து நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். தாயின் திருநாமம் சதாகாலமும் புகழப்படுவதாக!

**- Mrs. Lourdu Mary Gnanapragasam**

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 20 -1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org